KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஒக்ரோபர் – டிசெம்பர் 2019 காலாண்டிதழ் இதழ் – 24

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை


ரூபா 100/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

04 வலிகளை உரமாக்கி எழுந்த விருட்சங்கள்! அசாதாரண புருஷர்கள்...

35 முற்றத்து மல்லிகை



ISSN 2513-2989
9 772513 298007

வெளியீடு :
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

# பூபாலசிங்கம் புத்தகசாலை
# POOBALASINGAM BOOK DEPOT



**BOOK SELLERS, IMPORTERS , EXPORTERS & PUBLISHERS . NEWS PAPER AGENT. STATIONERS.**

No.202, SEA STREET, COLOMBO 11, SRILANKA.
No.309 A - 2/3, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO - 06.
No.4 A, HOSPITAL ROAD, BUS STAND, JAFFNA.

No.212, 1st CROSS STREET, VEMBADI JUNCTION, JAFFNA.
NALLUR KANDASWAMY TEMPLE VEETHY, NALLUR.

தமிழ் புத்தக விற்பனையாளர், இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், மற்றும் வெளியீட்டாளர். செய்திப் பத்திரிகை முகவர், பாடசாலைப் புத்தங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனையாளர்.



- இல. 4A, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
- செட்டியார் தெரு, கொழும்பு 11.
- இல. 309A – 2/3, வெள்ளவத்தை கொழும்பு.
- நல்லூர் வீதி, நல்லூர்.
- 1 ஆம் குறுக்குத்தெரு, வேம்படி, யாழ்ப்பாணம்.

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

ஒக்டோபர் – டிசெம்பர் 2019 காலாண்டிதழ் இதழ் – 24

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்**
திரு. க. தர்மசேகரம்

**நிர்வாக ஆசிரியர்**
திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**ஆசிரியர் குழு**
திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திரு. செ. பிரிந்தாபரன்
செல்வி. சு. கானப்பிரியா

**இதழ் குழு ஆலோசகர்**
திரு. கணபதி சர்வானந்தா

**வெளியீடு**
**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்**
இல. 1166 / 15, அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 4224

## பொருளடக்கம்

எண்ணக்கிண்ணம் – கவிதை - 02
பொதுமைப் பொறிமுறை - 03
வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 04
ஏ.ஜே. ஞானேந்திரன்
வலைவெளி ஓட்டிசம் (Autism) - 06
பாலபாரதி
வலு தரும் ஜோதிடம் -09
V.A. சிவராசா
செய்தி சாரம் - 11
தசரசம் - 12
எழுதுங்கள் வெல்லுங்கள் - 34
முற்றத்து மல்லிகை - 35
சிறுகதை
திறமையே இயலாமையை ஒழித்துவிடு - 37



எண்ணக்கிண்ணம்

# நாளைய விடியல் நமக்காக

நாடு எமது உயிர்மூச்சு - எனப்
பேசுவதெல்லாம் வெறும் பேச்சு
எல்லாத் தேசமும் நம் தேசம் - என
நேசம் கொண்டு வாழ்ந்திடுவோம்.

வெள்ளையன் கறுப்பன் பேதமெல்லாம் - இங்கே
இனியும் எமக்குள் வேண்டாமே
உலக மாந்தர் அனைவருமே - ஒரு
தாய் பெற்ற பிள்ளைகளே

இரத்தம் ஏதும் சிந்தாமல் - வெடிச்
சத்தங்கள் இனியும் கேட்காமல்
யுத்தம் இல்லா பூமிதனில் - நாம்
நித்தம் சமாதான கீதமிசைப்போம்

வறுமைகள் நீங்கிட வழிசெய்வோம் - சகோதரன்
விழிநீர் துடைத்திடக் கைகொடுப்போம்
ஏழைகள் வாழ்வு உயர்ந்திடவே - இங்கு
புதியதோர் பாதை நாம் சமைப்போம்.

உடலின் ஊனம் பொருட்டில்லை - ஏனெனில்
உள்ளத்தில் ஊனம் எமக்கில்லை
அடைவோம் நாமும் எமதிலக்கை - இனி
என்றுமே வானமே எமக்கெல்லை

ஒற்றுமை என்னும் கயிற்றினையே - நாம்
பற்றியே என்றும் பிடித்திடுவோம்
ஒரு தாய் பெற்ற பிள்ளைகளாய் - உலகில்
ஒன்று கூடியே வாழ்ந்திடுவோம்

வென்றவர் வரலாற்றைப் படித்திடுவோம் - அவர்
சாதித்த சாதனைகள் படைத்திடுவோம்
எதிர்மறை சிந்தனைகளை அகற்றிடுவோம் - இனி
விடியலை நோக்கியே பயணிப்போம்

விதையாய் இன்று விழுவோமே - நாளை
விருட்சமாய் உலகில் எழுவோமே
நமக்குள் நாமே ஒளியாவோம் - அதனால்
நாளைய விடியலின் கதிராவோம்.

**தயாமினி குபேரமூர்த்தி,**
**இணுவில்.**

# பொறிமுறை காண்போம்

மனித வாழ்வில் அனர்த்தம் என்பது எப்பொழுதும் எதிர்பார்க்கப்படக் கூடியதொன்றாக இருக்கின்றது. மனிதன் அனர்த்தங்களால் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாக வும் பாதிப்புறும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எனவே அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளத்தக்கதாக நாம் எமது வாழ்வைக் கட்டமைத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலை வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கும் பொதுவானதே.

மேற்கு நாடுகளில் அனர்த்த நிலைமைகளைக் கையாள்வதற்கான வசதிப்படுத்தல்கள் அதிகமான அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் ஒப்பீட டளவில் இந்த வசதிப்படுத்தல்கள் குறைவாகக் காணப்படுவ தால் அனர்த்தங்களால் விளைகின்ற பாதிப்புக்கள் பாரதூர மான தாக்கங்களைத் தந்த வண்ணமாக உள்ளன. இலங்கை போன்ற நாடுகளில் அணுகு வசதிகளில் காணப் படுகின்ற அபிவிருத்தியற்ற தன்மை வலு இழந்தவர்கள் அனர்த்த நிலைமைகளை எதிர் கொள்வதில் பாரிய சவாலை ஏற்படுத்துகின்றது.

அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வருகின்ற மண் சரிவு, வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்தங்களில் சிக்குண்ட வலுவிழப்புடன் கூடிய நபர்கள் சொல்லொணாத் துன்பங் களை சந்தித்து வருவதை நாம் காண்கின்றோம். இந்த நிலைமை யைக் கையாள்வதற்குப் பொருத்தமான பொறி முறை கண்ட றியப்படவேண்டும். வலு இழந்தவர்கள் மட்டில் கொள்கை வகுப்புக்களை மேற்கொள்ளும் போது அனர்த்த நிலை மைகளை எதிர்கொள்ளத்தக்க செயல் திட்டங்களை யும் உள்வாங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுது தான் வலு இழந்தவர்கள் ஓரளவுக்கேனும் அனர்த்தப் பாதிப்புக்களை எதிர்கொள்ளத் தக்கவர்களாக உருவாக வாய்ப்பு ஏற்படும்.

**திரு. க. தர்மசேகரம்**
பிரதம ஆசிரியர்

## வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்




# அசாதாரண புருஷர்கள்...

# வலுவிழந்தால் வாழ்க்கை அஸ்தமித்துவிடுமா, என்ன?

## ஒரு சாதனை நாயகி தீபா மாலிக்

ஏ.ஜே. ஞானேந்திரன்

தீபா மலிக் ஒரு தலை சிறந்த சாதனை யாளர்கள் வரிசையில் போற்றப்படுபவர். வலுவிழந்தவர் என்று பட்டியலில் தன் பெயர் இடம்பெற்றதால் அவர் மனம் சோர்ந்து விட்டாரா? இல்லவே இல்லை.. 2018ஆம் ஆண்டு துபாயில் இடம்பெற்ற வலுவிழந்தோருக்கான தடகளப் போட்டிகளில் ஒன்றான ஈட்டி எறிதலில் பங்கெடுத்துத் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தார் இவர்.அந்த மாற்றுத்திறனாளியின் திறமை கண்டு உலகமே வியந்தது.

2016இல் நடைபெற்ற கோடைகால பராஒலிம்பிக் போட்டியில், குண்டெறிதலில் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தவர் என்று சொன்னால் நம்புவீர்களா? ஒரு இந்திய மாற்றுத் திறனாளி இப்படி ஒரு பதக்கத்தை வென்றெடுத்தது இதுவே முதற் தடவையாகும். இது 2018 ஆண்டிலும் தொடர்ந்தது. ஆனால் அந்தத் தடவை ஒரு படி மேல் சென்று அவர் வென்றது தங்கப் பதக்கத்தை. இவர் 1970 செப்டெம்பர் 30 திகதி பிறந்தவர். இவர் ஆறு வயதுடையவராக இருந்த பொழுது முதுகில் இருந்த ஒரு கட்டியை அகற்றுவதற்காக, முதுகெலும்பில் ஒரு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். மீண்டும் 1999 ஆண்டில் அவரது முதுகெலும்பில் புற்றுநோய்த் தாக்கத்தை கண்டுபிடித்த மருத்துவர்கள் அவருக்கு 03 தடவை சத்திர சிகிச்சை மேற்கொண்டனர். அவர்கள் பயந்தது போலவே, சத்திர சிகிச்சை முடிவில், அவள் இடுப்பின் கீழ் எந்த இயக்கமும் இல்லாது போய்விட்டது. 183 இழைகள் போடப்பட்டன. படுக்கையிலிருந்து எழுந்து உட்காரப் பழகிக்கொள்ள அவளுக்கு 2 வருடங்கள் தேவைப்பட்டன.

இப்படியானதொரு உடம்பை வைத்துக் கொண்டு பத்மசிறீ விருது, அர்ஜுனா விருது , இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது என்ற பல விருதுகளை வாங்கிக் குவித்த இவர் நம்மை வியப்பின் எல்லைக்கு கொண்டு சென்றுள்ளார். இவர் அள்ளிய விருதுகளின் விபரங்களைப் பாருங்கள்.

- இறுதியாக கடந்த ஆண்டு “2019ஆம் ஆண்டிற்கான சேர் எட்மண்ட் ஹில்லரி தோழமை” விருதை நியூசிலாந்து நாட்டின் பிரதமரிடமிருந்து பெறுபவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- இதுவரையில் மொத்தமாக இவருக்கு கிடைத்த தேசிய விருதுகள் 58. சர்வதேச விருதுகள் 23

இவர் கணவர் பெயர் பிக்ரம் சிங் மலிக். தேவிகா, அம்பிகா என்ற பெயர்களில் இரு

பெண்பிள்ளைகள் இருக்கின்றார்கள். தீபா மாலிக் மட்டுமே இந்த ஆண்டு இந்திய ஜனாதிபதி கையால் கேல் ரத்னா விருது பெற்றார். இந்த விருதை பெறும் முதல் பெண் மாற்றுத் திறனாளி வீராங்கனை மற்றும் அதிக வயது கொண்டவர் தீபா மாலிக் தான் என்பது குறிப்பிடத்தக்கது. 2016 ரியோ" பாரா "ஒலிம்பிக்" தொடரில் "ஷாட் புட்"(குண்டெறிதல்) 53 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பைக் ரேஸில் பங்கேற்க ஓட்டுநர் உரிமம் பெற்ற முதல் பெண் மாற்றுத்திறனாளி இவர்தான். இவர் சிறந்த நீச்சல் வீராங்கனையும் கூட. யமுனா நதியில் நீரோட்டத்தை எதிர்த்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு நீந்தி சென்று லிம்கா சாதனை படைத்தார்.

இனிவரும் காலங்களில், விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றப் போவதில்லை என்று தன் "ஓய்வு" பற்றி அறிவித்திருக்கிறார் இந்த மாற்றுத் திறனாளி! இந்த உயரிய ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது. ஆரம்பத்தில் இவருக்கு வழங்கப்படுவதாக இருக்கவில்லை. இந்தியாவின் "நம்பர் ஒன்" மல்யுத்த வீரரும், ஆசிய, காமன்வெல்த் விளையாட்டு சாம்பியனுமான பஜ்ரங் பூனியாவுக்கு மிக உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்க பரிந்துரைப்பது என்று ஏற்கனவே ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டுக்குரிய (2019) "கேல் ரத்னா விருது." 2016-ம் ஆண்டு "ரியோ பாராஒலிம்பிக்கில்" குண்டு எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற மாற்றுத் திறனாளி வீராங்கனையான தீபா மாலிக்குக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. அரியானாவைச் சேர்ந்த 48 வயதான தீபா மாலிக் பாராஒலிம்பிக்கில் பதக்கம் கைப்பற்றிய முதல் இந்திய வீராங்கனை என்ற மகத்தான சாதனைக்கு சொந்தக்காரர்.



தொடர்ச்சியாக மூன்று பாரா ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீராங்கனையும் இவர் தான்.

இதேபோல், "அர்ஜுனா விருது" பெற 19 பேர் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதில், இந்திய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா, பெண்கள் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பூனம் யாதவ், தடகள நட்சத்திரங்கள் தஜிந்தர் பால் சிங் தூர், முகமது அனாஸ், ஸ்வப்னா பர்மன், தமிழ் தலைவாஸ் கபடி அணியின் தலைவர் அஜய் தாகூர் ஆகியோரும் அடங்குவர்.

இத்தனை சிறந்த வீரர்களுடன் ஒரு மாற்றுத் திறனாளியும் தெரிவாகி, நான் உங்களுக்கு எந்த வழியிலும் சளைத்தவளல்ல என்று நிரூபித்திருக்கிறார். "கேல் ரத்னா" விருதுக்கு இந்திய ரூபாவில் 7இலட்சமும், மற்ற விருதுகளுக்கு இந்திய ரூபாவில் 5 இலட்சமும், பாராட்டு பட்டயத்துடன் ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

இவர் வாரத்தில் 4 தடவைகள் கிரமமாக உடற்பயிற்சி செய்யும். பழக்கத்தைக் கொண்டிருந்தார். காலையில் 3 தொடக்கம் 4 மணி நேரமும், மாலையில் 2 மணி நேரமும் பயிற்சியில் ஈடுபடுவதாக இவர் கூறும்போது, எந்த அளவுக்கு இவர் தன் உடம்பை வருத்தியுள்ளார் என்பது புலனாகின்றது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கு இன்னொரு அசல் உதாரணம் இந்த மாற்றுத் திறனாளி தீபா என்றால் அது மிகையாகாது.


(கடந்த இதழ் 2இன் தொடர்ச்சி...)

# ஓட்டிசம்

பாலபாரதி

## சகிச்சை முறைகள்

ஒட்டிசத்திற்கான சிகிச்சை முறைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன், ஏற்கனவே முந்தைய பல கட்டுரைகளில் சொன்ன ஒரு விஷயத்தை முதலில் நினைவுபடுத்திக் கொள்வது நலம். ஒட்டிசக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் இருக்கக் கூடிய சிக்கல்கள் ஒரே மாதிரியானவை அல்ல. எனவே எந்தவொரு சிகிச்சையும் முற்றுமுழுதான தீர்வு எனக் கொள்ள முடியாமை இங்க நாம் சந்திக்கும் மிகப்பெரிய சவால்.



மேலும் பல மருத்துவ நிபுணர்கள் , ஆட்டிசம் ஒரு நோய் அல்ல குறைபாடு (Not a disease it's a disorder) தான் என்று சொல்லி வருகிறார்கள். இது உண்மையும் கூட! எனவே இதன் சிகிச்சை முறைகள் யாவுமே அப்பிரச்சனையின் தாக்கத்தைக் குறைத்து, இயல்பான ஒரு வாழ்வை வாழ அக்குழந்தையைப் பயிற்றுவிக்கவே முயலும். எனவே இரண்டு மாதம் இந்த சிகிச்சை எடுத்தேன், பிறகு குணமாகி விட்டது என்பது போன்ற அணுகுமுறைகள் சாத்தியமே இல்லை. அதற்காக ஆயுள் முழுவதும் தெரப்பிகள் தேவைப்படுமோ என்று பயப்படத் தேவையில்லை. தொடர் சிகிச்சைகளுக்குப் பிறகு தன் சொந்த முயற்சியில் அவர்களே தங்களது பிரச்சனைகளை சமாளித்துக் கொள்ள முடியும் என்கிற அளவுக்கு தயாராகி விடுவார்கள்.

முதன்மையாக நான்கு வகையான தெரப்பிகள் தேவைப்படுகின்றன.


1. நடத்தை சீராக்கல் பயிற்சிகள் – behavioral therapies
2. வளர்ச்சிக்கான பயிற்சிகள் – developmental therapies
3. கல்வி வளர்ச்சிக்கான பயிற்சிகள் – educational therapies
4. பேச்சுப் பயிற்சி – speech therapy

இந்த நான்கு பயிற்சிகளும் அனேக குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்பயிற்களின் வழியே ஒட்டிசத்தின் பாதிப்புக்கு உள்ளான குழந்தைகளை அடுத்தகட்ட நகர்வுக்கு கொண்டு செல்ல மிகவும் முக்கியமானதாக சொல்லப்படுகிறது.

**1. நடத்தை சீராக்கல் பயிற்சிகள்:**

இவை முக்கியமாக ஒட்டிசக் குணாதிசயங்களைக் குறைப்பதற்காக செய்யப்படுபவை. எடுத்துக்காட்டாக சென்சரி பிரச்சனையில் நாம் பேசிய சில ஒட்டிச குணாதிசயங்களை எடுத்துக் கொள்வோம்.

வாய்ப்பகுதியில் இப்பிரச்சினையுள்ள ஒரு குழந்தைக்கு கீழ்க்கண்ட சிகிச்சைகள் தரப்படும்.



1. சுடுநீராலும், ஐசாலும் மாறி மாறி ஒத்தடம் தரப்பட வேண்டும்.
2. வாயின் உட்பகுதி மசாஜ் செய்யப்பட வேண்டும் - இதற்கு வைப்ரேட்டர் உள்ள ப்ரஷ்கள் பயன்படுத்தப்படலாம்.
3. ஊதல், உறிஞ்சுதல் போன்ற செயல்கள் ஊக்குவிக்கபட வேண்டும்.

அதே போல் தன் உடலின் இருப்பை அறிவதில் இருக்கும் சிரமங்களுக்கு காரணம் மூட்டுகளில் இருக்கும் சென்சரி மையம் பலவீனமாக இருப்பதே காரணம். எனவே மூட்டுக்களை தனிப்பட மசாஜ் செய்வது, பண்டேஜ் துணி கொண்டு இறுகக் கட்டி வைப்பது போன்றவை இந்த உணர்ச்சியைத் தூண்டும்.

நேர்கோட்டில் நடக்கப் பயிற்சி அளிப்பது, ஒரு செயலுக்கு பாராட்டாக அவர்கள் விரும்பும் ஒரு பரிசு தருவதன் மூலம் பயிற்றுவிப்பது போன்ற பல்வேறு பயிற்சிகள் இந்த நடத்தை சீராக்கலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

**2. வளர்ச்சிக்கான பயிற்சிகள்:**

குழந்தைகளின் வளர்ச்சிப் படிநிலைகள்(Developmental Milestones) அவர்கள் ஒவ்வொரு பருவத்திலும் கற்றுக் கொள்ளக் கூடிய செயல்களைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. 3 மாதத்தில் தலை நிமித்துதல், 8 மாதத்தில் தவழுதல், 1 வருடத்தில் நடப்பது போன்ற படிநிலைகள் சாதாரண குழந்தைகளுக்கு இயல்பாகவே நடந்து விடும். மேலும் கண்ணாடி நியூரான்களின் உதவியோடு தன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களைப் பார்த்து அக்குழந்தைகள் தான் செய்ய வேண்டிய செயல்களைக் கற்றுக் கொள்ளும் பண்பையும் கொண்டிருக்கும். ஆனால் ஓட்டிசக் குழந்தைகள் சூழ இருக்கும் மனிதர்களின் செயல்களை கவனிப்பதும் இல்லை, அவற்றைப் போலச் செய்து பார்க்க முயற்சிப்பதும் இல்லை. எனவேதான் இவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளில் தேக்கம் ஏற்படுகிறது.

எனவே தானாகக் கற்றுக் கொள்ளாத இக்குழந்தைகளுக்கு செயல்களை நாமாக கற்றுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக மாடிப்படி ஏறுவது, நேர் கோட்டில் நடப்பது, இரு கால்களையும் தூக்கி குதிப்பது, ஓடுவது போன்ற செயல்களை நம் உதவியோடு முதலில் செய்ய வைத்துப் பழக்க வேண்டும். பிறகு மெல்ல மெல்ல அவர்களே அவற்றைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

வளர்ச்சிப் படிநிலைகளின் படி ஒரு குழந்தை செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியலை இங்கே பார்க்கலாம்.

**3. கல்வி வளர்ச்சிக்கான பயிற்சிகள்:**

கல்வி வளர்ச்சிக்கான பயிற்சிகள் என்பது எழுத்துக்கள், எண்கள், வார்த்தைகள், வடிவங்கள், வண்ணங்கள் போன்ற அடிப்படை விஷயங்களைச் இக்குழந்தைகளுக்குப் புரியும்படி சொல்லித் தருவதில் ஆரம்பிக்கும். தொடர்ந்து அந்தந்த வயதுக்குத் தகுந்த விஷயங்களை இக்குழந்தைகளுக்கு மிகுதியும் செயல் முறையில் சொல்லித் தர வேண்டியிருக்கும்.


சாதாரண வகுப்பறைச் சூழலில் கலந்து படிக்கக்கூடிய நிலையை இவர்கள் எட்டும் காலம் வரை இந்த சிறப்புக் கல்வி (special education) முறையையே தொடர வேண்டியிருக்கும்.

சிறப்புக் கல்வி என்பதை நாம் தனியாக அளித்தாலும் கூட வழக்கமான பள்ளிக்கு மற்ற சாதாரண குழந்தைகளுடன் அனுப்புவது மிகவும் முக்கியம். (சிறப்புக் கல்வி தேவைப்படும் இக்குழந்தைகளை சாதாரண மாணவர்களில் பள்ளிகளில் சேர்ப்பதே சிறந்தது. மேலை நாடுகளில் இந்நிலை இயல்பானதாக இருந்தாலும், இங்கே நம் நாட்டில் அப்படி ஒரு சூழல் இல்லை என்பதும், சிறப்புப் பள்ளி எனத் தனிப்பள்ளிகள் செயற்பட்டு வருவதும் வருந்தக் கூடியது)

**4. பேச்சுப் பயிற்சி:**

ஒட்டிசக் குழந்தைகளில் சிலர் பேச்சுக்கான தூண்டல்களே (speech stimuli) இல்லாது இருப்பர். அத்தகைய குழந்தைகளுக்கு பேச்சுப் பயிற்சியாளரைக்(Speech-language pathologists) கொண்டு பயிற்சி அளிக்க வேண்டியிருக்கும்.

பேச்சுப் பயிற்சி என்று ஒட்டு மொத்தமாக அழைக்கப்பட்டாலும் அடிப்படையில் இதில் மூன்று படிநிலைகள் உண்டு.



1. பேச்சுப் பயிற்சி -வாய், தொண்டை, சுவாச உறுப்புகள் போன்றவற்றின் செயற்பாட்டில் உள்ள குறைகளை கண்டறிந்து சீராக்குவது

2. மொழிப் பயிற்சி - மொழியின் அடிப்படைக் கூறுகளை புரிய வைப்பது. வார்த்தைகள், வாக்கிய அமைப்பு, இலக்கணம் போன்றவற்றை குழந்தைகளுக்குப் புரியும் வகையில் சொல்லித்தருவது

3. தொடர்பு மொழி பயிற்சி - பேசுவதற்கான ஆவலை உருவாக்குவது, மனிதர்களோடும், சூழலோடும் பொருந்தும்படி பேச பயிற்சி அளிப்பது போன்றவை இதில் அடங்கும்.

(தொடரும்)



வலு தரும் ஜோதிடம்

ஜோதிடர்: V.A.சிவராசா



# மணவாழ்க்கையில் மங்களநாயகன்

## செவ்வாய் தோசம்

"திருமணம் ஆயிரங் காலத்துப் பயிர்" நவக்கிரகங்களில் செவ்வாய்க்கு கொடுக்கும் மதிப்பு ஏனைய கிரகங்களுக்கு அளிப்ப தில்லை. குழந்தை பிறந்தவுடன் எழுதப்படும் ஜாதகத்தில் செவ்வாயுண்டா? அதாவது செவ் வாய் தோசம் இருக்கின்றதா? என பெற்றோர் பார்ப்பது திருமணத்திற்கு தடையின்றியும் இல் லற வாழ்வில் பிரச்சினைகள் எழாமல் மன மொத்த தம்பதிகளாக இன்ப சுகங்களை அனுபவித்து சந்தான விருத்தியும் செல்வ வள மும் பெற்ற பெருமையுடன் வாழ்வாங்கு வாழலாம் என்பதற்காகும்

திருமணப் பொருத்தம் பார்ப்பதில் தம்பதி களின் தோசங்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். இந்த தோசங்கள் குடும்பத்தின் நல்வாழ்வையும் தம்பதிகளின் சுக வாழ்க்கை யையும் பாதிக்கக் கூடியனவென்பதால் இவற்றை அலட்சியப்படுத்துவதென்பது நல்ல தல்ல. இந்த தோசங்களில் மிகக் கடுமையான தோசமாகக் கருதப்படுவது செவ்வாய் தோச மாகும்.

கிரகங்களுள் வலிமையில் மிகுந்த கிரக மாகச் செவ்வாய் இருப்பதினாலும் செவ்வாய் பாதகமான இடத்தில் இருந்தால் பாதகம் நேர் வது கண்டிப்பாக தவறாது, என்பதும் உண் மையாகும். செவ்வாய் பாரதத்தின் தென்பகு திக்குரிய தெய்வமாகப் போற்றப்படுகிறது. எனவே செவ்வாய் தோசம் என்பது தென்னாட் டுக்கு குறிப்பாக தமிழ் நாட்டுக்கு மிகுதியான கெடுதலைத் தராது என்பது நம்பிக்கை மிகுந்த செய்தியாகும்.ஆனால் திருமணப் பொருத்தம் பார்ப்பதில் செவ்வாய் தோசத்தை பிரதானமாக எடுத் துக் கொள்கின்றனர்.

சூரியனும் செவ்வாயும் ஜாதகத்தில் ஒரு ராசியில் இருப்பவர்களின் மண வாழ்க்கையில் குழப்பங்களைத் தவறாது செய்து கொண்டிருப் பதை அனுபவ மூலம் காண்கின்றோம். சூரி யன் செவ்வாயைக் குரு 5,7,9 ம் பார்வை பார்த் தாலும் புதன் போன்றன சேர்ந்து இருந்தாலும் இவற்றின் ஆதிக்கம் கெடுதல் செய்வதை குறைத்து விடும். சூரியன் செவ்வாய் சேர்ந்தி ருப்போர் இளவயதில் விவாகம் செய்வதைக் கைவிடுதல் நன்றாகும். எண் ஜோதிட விஞ் ஞானப்படி 9/18/27 திகதிகளில் செவ்வாய் ஆதிக்கத்தில் பிறப்போர் 2/11,20,29 ஆகிய திகதிகளில் பிறந்தோரை திருமண பந்தத்தில் இணைக்க வேண்டாம்.

செவ்வாய் தோசம் பற்றிய உண்மைக ளின் தத்துவங்களை சோதிடர்களுக்கு விளக்க மாநாடுகள் அடிக்கடி வைக்க வேண்டிய நிலைப்பாடு அவசியமாகும். இதனால், செவ் வாய் தோசம் பற்றிய நன்மை தீமைகளை உணர்ந்து விவாக வாழ்க்கையை நல்ல படி யாக அமைத்துக் கொள்ள முடியும். ஜாதகம் கணிக்கும் போது சில சோதிடர்களின் தவறான கணிப்பினால் செவ்வாய் தோசம் இல்லாத ஜாதகத்தில் இருக்கின்ற நிலைமையை எழுதி விடுகின்றனர். இத்தகைய நிலைமை மண வாழ்வின் பின்னர் பாதிப்பை ஏற்படுத்தி, மண முறிவுக்கு வழி வகுத்து விடுகின்றது. சிலருக்கு இரண்டாந் தாரத்தை ஏற்படுத்தும் வெளிநாடு களில் இருந்து திருமணம் செய்யும் நோக்கில் வருபவர்கள் அவசரப்போக்கினால் செவ்வாய் தோசம் பற்றிக் கருத்தில் கொள்ளாது விவா கத்தில் கால் பதித்து கன்னியர்களின் வாழ் வினை சிதைத்து விடுகின்றனர்.

ஆண் பெண் ஜாதகங்களில் ஜன்மலக்கினம் , சந்திரலக்கினம் , சுக்கிரலக்கினம், இவற்றிற்கு

2,4,7,8,12ம் இடங்களில் மங்களகாரகன், யுத்த காரகன், செங்கோள் என அழைக்கப்படு கின்ற, செவ்வாய் இருப்பின் தோசமுடைய தாகும். இருவருடைய ஜாதகமும் தோசத்தைக் கொண்டிருப்பின் மண வாழ்வு சிறப்புடைய தாக விளங்கும். பெண் ஜாதகம் தோசமுடைய தாகி ஆண் ஜாதகம் தோசமில்லாதிருப்பின் ஆணுக்கு பல விதமான கெடுதிகள் உண்டா கும். சில சமயம் மரணத்திற்கும் இடமுண்டா கலாம். அதேபோல் ஆணின் ஜாதகம் தோச முடையதாகி இருந்து பெண் ஜாதகம் தோச மில்லாதிருந்தால் பெண் பாலர்க்கு மண முறிவும் இல்லற வாழ்வில் இன்னல்கள் தலை விரித்தாடும்.


சில ஜாதகங்கள் செவ்வாய் தோசமுடை தாகக் காணப்பட்டாலும் சில பல காரணங்க ளினால் அந்த தோசம் நீங்கப் பெற்று நன் மையும் முன்னேற்றமும் உண்டாகும். சில சோதிடர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் செவ் வாய் கட்டாயம் இருந்தே ஆக வேண்டும் என்ற கோட்பாட்டினைக் கைவிடவே மாட்டார் கள். ஜாதகப் பொருத்தங்களின் காரணமாக தமிழ் மக்களின் சனத்தொகை காலப்போக்கில் குறைவடையலாம். எனவே நவக்கிரகங்க ளில் செவ்வாய் பற்றிய விளக்கங்களில் கடும் போக்கினைத் தளர்த்தி விவாகப் பொருத்தத் தில் பின்வரும் முறைகளைக் கைக்கொண்டு தம்பதிகளை இணைக்க முன்வரவேண்டியது அவசியமாகும்.

வாக்கியப்பஞ்சாங்கத்தில் செவ்வாய் பற் றிய விளக்கம் அருகிக் காணப்பட, திருக்கணி தத்தில் மிகவும் விளக்கமாக செவ்வாய் தோஷம் பற்றிக் குறிப்பிட்டும் எத்தகைய கார ணங்களில் இத்தோஷம் கெடுதி செய்யாது எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

- செவ்வாய் 2,4,7,8,12ம் வீடுகளொன்றி லிருந்து அவ்விடங்கள் சரராசிகளாகிய மேடம், கற்கடகம், துலாம், மகரம் ஆகிய இராசிகளாயிருப்பின் அதன் தோசம் நீங்கப் பெறும்.
- செவ்வாய் 2,4,7,8,12ம் வீடுகளொன்றில் தோஷமுடையதாய் இருப்பினும் அந்தச் செவ்வாய் குரு, புதன், சுக்கிரன் பூர்வபக்கச் சந்திரன் ஆகிய கிரகங்க ளோடு சேர்ந்தி ருந்தால் அல்லது அவர்க ளுடைய பார்வையைப் பெற்றிருந்தாலும் எந்த வித தோசத்தையும் செய்யாது.
- தோசமுடைய செவ்வாய் இராசிச் சக்கரத் தில் ஆட்சிவீடு உச்சவீடு ஆகியவற்றிலும் அல்லது நவாம்சத்தில் ஸ்வநவாம்சம் உச் சாம்சம் முதலியவற்றில் இருப்பினும் எக் காலமும் தோசம் தராது நன்மை யையே செய்யும்
- சுந்திர சூரிய இராசிகளான கடக, சிங்க இலக்கினங்களில் ஜனனமான ஜாதகர்க ளுக்கு செவ்வாய் கிரகம் எவ்வித தோசத் தையும் அளிக்காது நன்மையான் பலன்க ளையே செய்யும்".
- தோசமுடைய செவ்வாய் இருக்கும் இராசி நாதன் அவர் இருக்கும்" இராசிக்கு முறையே 1,4,5,7,9,10ம் இடங்களில் இருந்தால் அச்செவ்வாயால் தோஷ மில்லை.
- செவ்வாய் ஸ்திர இராசிகளான சிங்கம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் இருப்பின் தோசம் அளிக்காது மணவாழ்க்கையை சிறக்க வைப்பதுடன் பதினாறும் பெற்று பெருமையடையச் செய்யும்.
- செவ்வாய் மணமக்களின் ஜாதகங்களில் மிதுனம்,கன்னி ஆகிய இராசிகளில் இருந்து அது இலக்கினத்திற்கு 2ம் இடமா னால் தோசமில்லை.
- செவ்வாய் மேடம் விருச்சிகம் இராசிகளில் இருந்து அது இலக்கினத்திற்கு 4ம் இடமா னால் தோசம் தருவதில்லை.
- செவ்வாயானது மேடம் விருச்சிகம் இராசி களிலிருந்து குருவுடன் சேர்ந்திருந்தால் தோசத்தினால் கெடுதி ஏற்படாது.
- செவ்வாய், மகரம், கடகம் ஆகியவற்றிலி ருந்து அது இலக்கினத்திற்கு 7ம் இடமா னால் தோசமே தருவதில்லை.
- செவ்வாயானது தனு, மீனம் இவைகளி லிருந்து இலக்கினத்திற்கு 8ம் இடமானால் தோசம் தராது.
- ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் 1,2,4,7,8,12ம் இடங்களில் இருந்து குரு சந்திரயோகம் உடையதாக இருந்தால் செவ்வாயால் கெடுதி ஏற்படாது நன் மையே செய்யுமெனலாம்.

# செய்திச் சாளரம்

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு



ஒக்டோபர் 15 சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். இதனை யொட்டி தீவக லயன்ஸ் கழகம், கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தோடு இணைந்து கடந்த 20.10.2019 அன்று வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வினை அனுஷ்டித்திருந்தது.

தீவக லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த A.சபாநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழவில், வெள்ளைப்பிரம்பு தொடர்பான விழிப்பூட்டல் செயற்பாடுகள் இடம் பெற்றதுடன், கருவியின் பார்வையற்ற அங்கத்தவர்களுக்கு வெள்ளைப்பிரம்புகள் மற்றும் அன்பளிப்புக்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கருவி தலைவர் திரு க. தர்மசேகரம், கருவி நிர்வாக சபையினர், அங்கத்தவர்கள் மற்றும் லயன்ஸ கழக உறுப்பினர்களான A.சபாநாதன், E.லம்போதரன், S.சதீஸ்குமார், T.சீவரட்ணம், மு.கணபதி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



# தசரசம்

இலக்கியம் இலங்கை உலகம் விண்வெளி விளையாட்டு
மருத்துவம் தாவரம் விலங்கு பிரபலம் அதிசயம்

## 01. இலக்கியம்


### இராமர் கதை

தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்

(கடந்த இதழ் 23 இன் தொடர்ச்சி...)

தசரதன் ஒருநாள் கண்ணாடியில் முகம் பார்த்த போது, அவனது காதோரம் ஒரு நரைமுடி தெரிந்தது. ஓ! எனக்கு முதுமை வரத் தொடங்கி விட்டது. எனவே ராஜ்ய பாரத்தை முறைப்படி மகன் இராமனிடம் கொடுத்துவிட வேண்டும் என எண்ணியவனாய் மந்திரா லோசனை சபையைக் கூட்டுகின்றான். அங்கே குல குரு வசிடர், அமைச்சர்கள் ஆகியோர் வந்து தத்தம் ஆசனங்களில் அமர்கின்றனர். முதலில் தசரதன் "சூரிய குலத் தோன்றல்களான என் மூதாதையர்கள் வழியில் வந்த ராஜ்ய பாரத்தை என் தோளில் தாங்கி அறவழியில் ஆட்சி புரிந்தேன். இப்போது எனக்கு முதுமை வரத் தொடங்கிவிட்டதால் இந்த ராஜ்ய பாரத்தை சுமக் கும் வலிமை என்னிடம் குறைந்து வருகின்றது. இதனால் இப் பாரத்தை இராமனிடம் வழங்கி விட்டு பிறவி நோய்க்கு மருந்தான தவ வேள்வியைத் தொடங்க விரும்புகிறேன்" என்றான். இதனைக் கேட்டு அங்கிருந்தவர்கள் இராமனுக்கு ராஜ்யம் கிடைப்பதால் மகிழ்ச்சியும், தசரதன் ஓய்வால் துக்கமும் அடைந்தனர். எனினும் விதியின் வழியே அனைத்தும் நடக்கும் என்று அவர்கள் உறுதியாக நம்பியதால் அனைவரும் இதனை விருப்பத்தோடு ஏற்றனர். தொடர்ந்து வசிடர் "தசரதா! அறம் உணர்ந்தவர்கள் செய்ய வேண்டிய செயலையே நீ செய்யத் துணிந்திருக்கிறாய். இராமன் நெறி தவறாமல் உன்னைப் போலவே சிறப்பாக ஆட்சி புரிவான். மக்களும் தங்கள் உயிரிலும் மேலான இராமனை மகிழ்வோடு ஏற்பார்கள். எனவே உன் எண்ணப்படியே, இராமனுக்கு முடி சூட்டலாம்" என்றார். இதனைக் கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ந்து குருவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். தொடர்ந்து அமைச்சர் சுமந்திரன் "இராமனுக்கு அரசுரிமை என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி எனினும், உங்களது பிரிவு என்பது எங்கள் உள்ளங்களைச் சுட்டெரிக்கின்றது. ஆயினும் உங்கள் குலதர்மப்படி நீங்கள் செய்யும் எந்தச் செயலும் அறவழிப்பட்டதே" என்றான். தொடர்ந்து இராமனுக்கான முடிசூட்டு விழா ஆயத்தங்கள் ஆரம்பமாயின.

தசரதன் இச் செய்தியைக் கூற சுமந்திரனை இராமனிடம் அனுப்பினான். இராமனது மாளிகைக்குச் சென்ற சுமந்திரன் "இராமா! உன் தந்தையாகிய தசரதன் ஒரு காரியத்துக்காக உன்னை வரும்படி பணித்திருக்கின்றான்" என்றான். இதைக் கேட்ட இராமன் தன் தம்பியாகிய இலக்குமணனுடன் புறப்பட்டு தசரதன் இருந்த இடத்தை அடைந்து அவரைத் தொழுது நின் றான். இராமனைத் தன் அருகில் அமர்த்திக் கொண்ட தந்தை "இராமா! எனக்கு முதுமை வந்த மையால் ராஜ்ய பாரம் சுமையாக இருக்கிறது. இதிலிருந்து விடுபட்டு தவநெறியை



மேற்கொள்ள நீதான் எனக்கு உதவி புரிய வேண்டும்" என்றான். தந்தையின் கருத்துக்களை கேட்டு, தனது சம்மதத்தை குறிப்பால் உணர்த்திய இராமனை, தந்தை தசரதன் தழுவி ஆசீர்வதித்து அனுப்பினான். முடிசூட்டு விழாவுக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கின. அரண்மனை ஜோஷியர் விழாவிற்கான நாளைக் குறித்தார். எல்லா நாட்டு அரசர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. வசிட்ட முனிவர் தனது பணிகளைத்தொடங்கினார். இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தி மக்களிடம் பரவியதால் அவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திழைத்தனர். அயோத்தி நகர் பல நிறக் கொடிகளாலும், பந்தல், தோரணம், வாழை, கமுகு போன்ற வற்றினாலும் அலங்கரிக்கப்பட்டு தேவலோகம் போல காட்சி அளித்தது.

இந்த ஆரவாரங்களைக் கேட்ட கைகேயியின் சேவகியான மந்தாரை எனும் "கூனி", என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக வெளியே வந்தாள். இந்தக் கூனி யார்? கைகேயி திருமணமாகி கணவன் வீட்டுக்கு வந்த போது, அவள் அன்னையால் துணையாக அனுப்பி வைக்கப்பட்டவள் தான் இந்த மந்தரையெனும் கூனி. மூவுலகத்துக்கும் துன்பம் ஊட்டக் கூடியவளான இந்தக் கூனி இராமனின் பட்டாபிஷேக செய்தி கேட்டு வருந்தினாள். மிகுந்த கோபம்கொண்டாள். இராமன் மீது இவளுக்கு ஏன் இவ்வளவு கோபம்? ஆத்திரம்? பொறாமை? காரணம் இருக்கிறது. முன்பொரு நாள் இராமன் சிறுவனாக இருந்த போது, தன் வில்லில் மண் உருண்டைகளை வைத்து இந்தக் கூனியின் கூன்விழுந்து வளைந்த முதுகில் அடித்து விளையாடியது அவளது ஆழ்மனத்தில் இருந்தது. இதுவே அவனுக்குப் பட்டாபிஷேகம் என்றதும் அவளுக்கு மிகுந்த கோபத்துக்கு உண்டாக்கியது. இதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று நினைத்த அவள் தன் எஜமானியான கைகேயியின் மாளிகைக்கு விரைந்து செல்கின்றாள். அங்கே பட்டு மெத்தையில் படுத்திருந்த கைகேயியைத் தொட்டு எழுப்பி "அடியே கைகேயி உனக்கு வரும் நன்மைகள் அனைத்தும் தொலைந்து போயிற்று. உன் செல்வம் அனைத்தும் அழிந்து போயிற்று. புத்திசாலியான கோசலை, தன் புத்தியால் வாழ்கிறாள். இராமன் நாளை முடிசூட்டிக் கொள்ளப் போகிறானாம்" என்றாள் கூனி. இராமனுக்கு முடிசூட்டு விழா என்றதும் கைகேயியின் மனம் ஆனந்தக் கூத்தாடியது. உள்ளக் களிப்பில் கண்களில் மகிழ்ச்சி பொங்க, "நல்ல செய்தி கொண்டு வந்த உனக்கு இந்தா இந்த மணிமாலை" என்று ஒரு விலை மதிக்க முடியாத இரத்தின ஹாரத்தைப் பரிசாக அளித்தாள். இதனை சற்றும் எதிர்பார்க்காத கூனி கடும் கோபம் கொண்டவளாய், அந்த மாலையைத் தூக்கி எறிந்தாள்.

கைகேயியின் மனதை மாற்ற தொடர்ந்தும் பல வார்த்தைகளை அவளுக்கு கூறினாள். ஆனாலும் கைகேயியின் மனம் மாற்றமடையவில்லை. இருந்தும் பிடிவாதமாய் நின்ற கூனி "இராமனுக்கு ராஜ்யம் என்று ஆகிவிட்டால் பொறாமை குணம் கொண்ட கோசலை

உன்னையும், உன் மகனையும் எப்படி நடத்துவாள்? அவள் உவந்து போடும் பிச்சைதான் உங்களுக்குக் கிடைக்கும். இப்போது நீ விரும்பியவர்களுக்கெல்லாம் தான தர்மம் செய்கிறாயே, இனி முடியுமா? அந்த கோசலையிடம் போய் தானம் செய்ய பொருள் கொடு என்று கேட்பாயோ? அல்லது கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லி அனுப்பிவிடுவாயோ? அல்லது கொடுக்க முடியவில்லையே என்று அவமானத்தால் மாண்டு போவாயோ? எப்படி இருக்கப் போகிறாய் சொல்!. உன் தந்தைக்கும் ஜனகமகாராஜனுக்கும் ஏற்கனவே பகை இருக்கின்றது. இதனால் இராமன் அரசன் என்று ஆகிவிட்டால், அவன் தன்னுடைய மாமனார் பக்கம் தான் இருப்பான். அப்போது உன் தந்தையின் கதி என்னவாகும்?" என்று கைகேயியின் மனதைச் சிறுகச் சிறுக மாற்றினாள். விதியின் வழியே யாவும் நிகழும் என்பதற்கேற்ப இராவணனின் சங்காரத்துக்காக அவதரித்த இராமன் அச்செயலைச் செய்தே ஆகவேண்டும் இதனால் தான் கூனியின் பிடிவாதமும், கைகேயியின் மனமாற்றமும் விதி வழியே நிகழ்ந்தது எனலாம்.

மனமாற்றமடைந்த கைகேயி, மகாலட்சுமி போல் இருந்த தன் அழகிய தோற்றத்தை அலங்கோலமாக்கி மூதேவி போல் மாறினாள். மங்கலம் நிறைந்திருந்த அவள் முகம் அமங்கலமாக காட்சியளித்தது. தலைவிரி கோலமாய் நிலத்தில் வீழ்ந்து கிடக்கிறாள். நள்ளிரவுப் பொழுதில் நாளை இடம்பெறவுள்ள இராமனுக்கான முடிசூட்டு விழா பணிகளுக்கான ஆயத்த வேலைகளை பூர்த்தி செய்த மனக் களிப்போடு தசரதன் கைகேயின் மாளிகைக்கு வருகின்றான். அங்கே கைகேயியின் காட்சியைக் கண்டு திகைத்தவனாய், "உனக்கு என்ன நடந்தது" எனக் கேட்கின்றான். அதற்கு அவள் கூனி நினைவு படுத்திய சம்பராசுர வதத்தின் போது தசரதன் தனக்கு தருவதாய் வாக்களித்த வரங்களைக் கேட்கின்றாள். இந்த சம்பராசுர வதம் பற்றிப் பார்ப்போம்.

அயோத்தி நகரை தசரதச்சக்கரவர்த்தி ஆண்ட காலத்தில், வைஜயந்திப் பட்டினத்தை தலை நகராககொண்டு தண்டக வன இராஜ்யத்தை நிமித்ரசன் எனும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். இக்காலத்தில் தண்டக வன மலைப்பகுதியில் சம்பராசுரன் எனும் அரக்கன் கடும் தவமும் பல யாகங்களும் செய்து அதீத சக்தியையும் பலத்தையும் பெற்றான். இதனால் சகல ஜீவராசிகளையும் துன்புறுத்தத் தொடங்கினான். இவனது தவ வலிமை இந்திரப் பதவிக்கு ஆபத்தை விளைவிற்கும் அளவிற்கு வந்தது. இதனால் கடும் கோபம் கொண்ட இந்திரன் சம்பராசுரனால் இடப்பட்ட கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றி வந்த அசுரர்கள் மீதும் அச்சூரனோடும் போர் புரியத் தயாரானான். தண்டகவன இராஜ்யத்தில் இச்சூரனின் கொடுமைகளால் அந்தணர்களும், மக்களும் யாகங்கள் வேள்விகள் என்பனவற்றைச் செய்ய முடியாமலும் இறை வழிபாடு செய்ய முடியாமலும் துன்புற்றனர். இதனால் மன்னன் நிமித்ரசன் செய்வதறியாது தவித்தான். இவ்வேளை தெய்வேந்திரன் தேவர்களுடன் படையெடுத்து வைஜயந்திப் பட்டினத்திற்கு வந்தான். இப்போது தேவ அசுர யுத்தம் நிகழ்வது உறுதியாகி விட்டது. இதில் அசுரர்களுக்கு எதிராகப் போர் புரிய அனைத்து நாட்டு மன்னர்களும் தங்கள் படைகளுடன் வருகை தந்தனர். தசரதன் தன் மனைவி கைகேயியோடு வந்தான்.

சம்பராசுரனுடன் யுத்தம் மூண்டது. பூவுலக வேந்தர்களின் படைகள் தசரதச் சக்கரவர்த்தியின் தலைமையில் ஒன்று திரண்டன. வானுலக தேவர்களின் சேனைகள் தேவேந்திரன் தலைமையில் அணிதிரண்டனர். இவ்விரு படைகளையும் அசுரர்கள் ஒன்று கூடி எதிர்த்தனர். அனேக வீரர்கள் மாண்டு போயினர். அசுரர்கள் செய்வதறியாது திகைத்தனர். மாலைப் பொழுது தாண்டி இருள் சூழத் தொடங்கியது. இவ்வேளை இயல்பாகவே அசுரர்களின் சக்தி அதிகரிக்கும் இதனால் மாயையுத்தத்தில் தேர்ச்சி பெற்ற அசுரர்கள் தாக்கத் தொடங்கினர். இதில் பூலோகப் படைகள் பின்னடைவைச் சந்தித்தனர். ஆனால் தசரதன் திறமையாகப்

போராடி அசுரப்படைகளைக் கொன்று குவித்தான். இதனைக் கண்ட சம்பராசுரன் அவனது தேர் அச்சாணியை உடைத்தெறிந்தான். அப்போது அத் தேரில் நின்று கொண்டிருந்த கைகேயி முன்னமுள்ள ஒரு சாபத்தின் பயனாய் தன் கை விரல்களை இரும்பாக்கி அத் தேரின் அச்சாணியாய் வைத்து தேரையும் மன்னனையும் காப்பாற்றினாள். எனினும் அசுரர்களின் மாயை யுத்தத்தில் தசரதனது தேர்ச்சாரதி பலியாக தசரதனும் படுகாயமுற்றான். இவ்வேளை கைகேயி தன் புத்திசாதுரியத்தால் அத்தேரினை செலுத்தி யுத்த களத்திலிருந்து வெளியே கொண்டு வந்து அவனது உயிரைக் காத்தாள். இதனால் மகிழ்ந்த மன்னன் அவளுக்கு நன்றி கூறியதுடன் இரு வரங்களைத் தருவதாகச் சொன்னான். அதற்கு அவள் தனக்கு தகுந்த சமயம் வரும் வேளையில் இவ் வரங்களைப் பெறுவதாகச் சொன்னாள். இந்த வரங்கள் தான் இப்போது மன்னனுக்கு ஆபத்தாக வந்து விட்டது.

அந்த இரண்டு வரங்களைத் தான் கைகேயி இப்போது கேட்கின்றாள்.

"ஏய வரங்கள் இரண்டில் ஒன்றினால் என்
சேய் உலகாள்வது, சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது எனப்புகன்று நின்றாள்
தீயவை யாவையினும் சிறந்த தீயாள்"

"நீங்கள் கொடுத்த இரண்டு வரங்களில் ஒன்றினால் என் மகன் பரதன் முடிசூடி ராஜ்யத்தை ஆளவும், மற்றொரு வரத்தினால் சீதைமணாளன் இராமன் வனம் செல்லவும் வேண்டும்" என்றாள் கைகேயி. இதைக் கேட்ட மன்னன் வேதனையில் அதிர்ச்சி அடைந்து கீழே விழுந்தான். கைகேயி மேலான கோபம் தலைக்கேற, ஒன்றும் செய்ய முடியாமல் திகைத்தான். கைகேயியை தசரதன் பார்த்து "உனக்கு என்ன புத்தி பேதலித்து விட்டதா? வஞ்சனையால் யாரேனும் உன் மனதில் கழங்கம் ஏற்படுத்தினரோ? உண்மையைச் சொல்" என்றான். சற்றும் பிடிவாதத்திலிருந்து இறங்காதவளாய் அவள் இராமன் வனம் புகவேண்டும் என்ற வரத்தில் உறுதியாக இருப்பதை உணர்ந்த தசரதனின் உயிர் சோர்கிறது. "ஐயோ! தர்மத்தைக் காப்பது மிக மிகக் கொடியது" என்று கூறி புலம்புகிறான். பின்பு தள்ளாடி கீழே விழுகின்றான். தசரதன் கைகேயியின் கால்களில் வீழ்ந்து கெஞ்சிக் கேட்கிறான். "கைகேயி! உன் மகன் பரதன், இந்த அரசை ஏற்கமாட்டான். அப்படி அவன் ஏற்றுக் கொண்டாலும், இந்த நாடும் மக்களும் அதை ஏற்றுக் கொள்ளார். பரதன் நாடு ஆள, இராமன் காடு போக தேவர்கள் உள்ளிட்டோர் எவருமே சம்மதியார். நீ உன் மகன் பரதனுக்கு ஆட்சி வேண்டும் என்பதை இராமனிடம் கூறினால், அவனே மனம் விரும்பி ராஜ்யத்தைக் கொடுத்து விடுவான். கைகேயி! நீ என் கண்களை வேண்டுமானாலும் கேள்! கொடுத்து விடுகிறேன். என் உயிரை வேண்டுமானாலும் கேள்! கொடுத்து விடுகிறேன். வேண்டுமானால் உன் மகனுக்கு இந்த ராஜ்யத்தை எடுத்துக்கொள். மற்றொரு வரத்தை மட்டும் மறந்து விடு!" என்று வேண்டி நின்றான். கொஞ்சமும் மனமிரங்காத கைகேயி "மன்னா! இந்த வரங்களை முன்னே தந்தாய். இப்போது தரமறுத்து கோபப்பட்டால், உன் வாய்மை என்னாவது?" என்று கூறி அவனது அறிவுரைகளை ஏற்க மறுத்தாள். "இனி இராமன் காடு போவதைக் தடுக்கவும் இயலாது என் உயிர் பிரிவதையும் தடுக்க இயலாது" என்று உணர்ந்த தசரதன் கீழே வீழ்ந்தான். எதற்கும் இரங்காத கைகேயி "அரசே! நான் கேட்ட வரங்களைத் தருவதாக மனதாரச் சொல். இல்லையேல் இப்போதே உயிர் விடுவேன்" என்றாள். இவளது கொடுஞ்சொல் கேட்ட மன்னன், இவள் இறந்து விடுவேன் என்கிறாளே என்று கருதி "இந்த வரங்களைத் தந்தேன்! தந்தேன்!" என்றான். "இனி நான் இறந்து போய் விண்ணுலகை ஆள்வேன்" என்றான். வரங்களைப் பெற்ற திருப்தியில் கைகேயி நிம்மதியாக உறங்கச் சென்றாள்.

## 02. அன்றில் பறவை


இணைபிரியா அன்றில் பறவைகள்

-Black-headed Ibis

(Threskiornis melanocephalus)

**உயிரியல் வகைப்பாடு**

| | |
|---|---|
| திணை: | விலங்கு |
| தொகுதி: | முதுகுநாணி |
| வகுப்பு: | பறவை |
| வரிசை: | பெலிகனிபார்மசு |
| குடும்பம்: | Threskiornithidae |
| பேரினம்: | Plegadis |
| இனம்: | P. falcinellus |





கோலதேவ் தேசியப் பூங்கா, பரத்பூர், ராஜஸ்தான், இந்தியா

அன்றில் என்றால் ஒன்றை விட்டு மற்றொன்று பிரிந்திராது என்று பொருள் (அன்றி இல் அன்றில்). இப் பறவைகள் ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் தன் துணையுடன் சேர்ந்தே வாழும் தன்மையுடையது. துணையில் ஒன்று பிரிந்தாலும் உடனே கூவி அழைக்கும். தூங்கும் போது கூட, ஒன்றின் மீது மற்றொன்று பார்வை வைத்தே தூங்குமாம். இதனையே நளவெண்பாவில் "ஒரு கண் ஆர்வத்தால்- அன்றில் இன்றுணை மேல் வைத் துறங்கும்" எனும் வரிகள் மூலமாகக் கூறப்பட்டுள்ளது. சோடிப் பறவைகளில் ஒன்று இறந்து விட்டால் மற்றதும் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளும் இதனாலேயே இப் பறவைக்கு அன்றில் எனப் பெயர் வரக் காரண மாயிற்று. சங்க இலக்கியத்தில் முக்கிய இடம்பிடிக்கும் பறவைகளுள் ஒன்றாக, அன்றில் பறவை காணப்படுகின்றது. இது நெய்தல் நிலத்தில் வாழும் பறவையினம். இதை குறிஞ்சிப்பாட்டில் - "ஏங்குவயிர் இசைய பெருவாய் அன்றில்" என்றும், குறுந்தொகையில் - "எலிதகைந் தன்ன செந்தலை அன்றில்" என்றும் அன்றில் பறவை பற்றி கூறப்பட்டுள்ளது. அக் காலத்தில் தலைவன் தலைவிக்கிடையிலான காதல், ஏக்கம், தவிப்பு, பிரிவு போன்றன அன்றிலின் வாழ்கையோடு ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது. இப் பறவைகள் கடலோரப் பனை மரங்களில் கூடுகட்டி வாழ்வதால் இதனை "பனை வாழ் அன்றில்" என்றும் இலக்கியங்களில் கூறப்படுகின்றது.

இது, ஐ.பி.ஸ் இனத்தைச் சேர்ந்த அரிவாள் மூக்கன் குடும்ப கரைப்பறவையாகும். ஆபி ரிக்காவில் இருந்த இப்பறவையினம், 19ம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவிற்குப் பரவிய தாக நம்பப்படுகிறது.இது பின்னர் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக் காவின் அட்லாண்டிக் பெருங்கடல், கரீபியன் பகுதிகளுக்கு குடிபெயர்ந்தது. இவ்வினமானது பருவகாலங்களுக்கேற்ப புலம்பெயர்கின்றது. ஐரோப்பிய இனம் ஆபிரிக்காவிற்கும், வட அமெரிக்க இனம் கரோலினாவிற்கும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி குளிர்காலங்களில் இடம் பெயர்கின்றன.

இப் பறவை 55-65 செ.மீ. நீளமும், 88-105 செ.மீ. இறக்கை வீச்சளவும் கொண்டது. பருவம்வந்த பறவைகள் செந்நிற உடலையும் ஒளிரும் கரும்பச்சை இறக்கைகளையும் கொண்டிருக்கின்றன. பருவம் வராத இளம் பறவைகள், பழுப்பு நிறத்தில் காணப்படுகின்றன.

மரப்பழுப்பு நிற அலகை கொண்ட இப்பறவைகளின் மேற்பகுதி கறுப்பு நிறத்திலும், கீழ்ப்பகுதி நீல நிறத்திலும் காணப்படுகிறன. இதன் கால்கள் சிவந்த பழுப்பு நிறத்தைக் கொண்டவை. இவை கழுத்தை நீட்டிய படி வரிசையாகப் பறக்கின்றன.

பொதுவாக அமைதியாக காணப்படும் அன்றில் பறவைகள், இனப்பெருக்கக் காலங்களில் கரகரப்பான உறுமல் ஒலியை எழுப்பி துணையைக் கவர்கின்றன. பெரும்பாலும் சதுப்பு நிலப் பிரதேசங்களிலும் கடல் பகுதிகளிலும் தமக்கான உணவுகளை கூட்டமாக தேடி உண்ணும் இப் பறவைகள் மீன், தவளை மற்றும் நீர்வாழ் உயிரினங்கள், பூச்சிகள் என்பனவற்றை விரும்பி உண்கின்றன.

## 03.இலங்கை

(சென்ற இதழ் வலு 23ன் தொடர்ச்சி...)

### சனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாமைக்கான விடுபாட்டுரிமை

35. (1)எவரேனுமாள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்ற போது, அவரது பதவி முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் சனாதிபதிக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு எதுவும் தொடுக்கப்படுதல் அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதல் ஆகாது.

ஆயின் இப்பந்தியிலுள்ளது எதுவும் சனாதிபதியால் தமது பதவிமுறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் 126 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்துறை தலைமையதிபதிக்கு எதிராக தோதான வழக்கு நடவடிக்கையைத் தொடுப்பதற்கு எவரேனுமாளுக்குள்ள உரிமையை மட்டுப்படுத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

ஆயின் மேலும் 33 (2) (எ) என்னும் உறுப்புரையின் கீழ் சனாதிபதியால் பிரயோகிக்கப்படும் எந்த தத்துவங்கள் மீதும் எத்தீர்ப்பையும் வெளிப்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் நியாயாதிக்கம் உடையதல்ல.

(2) எவரேனுமாளுக்கு எதிராக எவ்விவரணத்திலுமான வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான கால எல்லையை வரையறுத்துச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விடத்து, அச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எதனையும் கணிப்பதில், அத்தகைய ஆள் இலங்கைக்குடியரசின் சனாதிபதிப் பதவியை வகிக்கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட விடுபாட்டுரிமை, 129 என்னும் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழும் மற்றும் 130 (அ) என்னும் உறுப்புரையின் கீழும் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் வலிதுடைமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

### சம்பளமும் ஓய்வூதியமும்

36. (1) அரசியலமைப்புத் தொடங்குவதிலிருந்து ஒரு மாதகாலத்தினுள் சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறுவதற்கு உரித்துடையராயிருக்கும் சம்பளத்தையும் படி களையும் ஓய்வூதியத்தையும் பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய ஓய்வூதியம், ஏதேனும் முந்திய சேவையின் பயனாக அத்தகைய ஆளுக்கு உரித்தான வேறேதேனும் ஓய்வூதியத்திற்கு மேலதிகமானதாயிருத்தல் வேண் டும்.

(2) சனாதிபதி என்ற பதவியை ஏற்பதன்மேல் அத்தகைய பதவியைத் தாங்குபவர் பாராளு மன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளத்தையும் படிகளையும் பெறுவதற்கும், அதன் பின்னர் அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுவதற்கும் உரித்துடைய வராதல் வேண்டும். அத்துடன் இந்த உறுப்புரை பின்னர் திருத்தப்படுவதும், நீக்கப்படு வதும் அல்லது மாற்றீடு செய்யப்படுவதும், இந்த உறுப்புரையுடன் ஒவ்வாததாகவுள்ள ஏதேனும் பின்னரான சட்டம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு, கடந்த காலத்தை உள்ள டக்கும் பயனுடையதாகாது.

(3) சனாதிபதியின் சம்பளமும் படிகளும் ஓய்வூதியமும் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம், தீர்மானத்தின் மூலம், சனாதிபதி என்ற பதவியை வகிப்போர் பெறு வதற்கு உரித்துடையவராயிருக்கும் சம்பளத்தை அல்லது ஓய்வூதியத்தை அதிகரிக்கலாம், ஆனால் குறைதலாகாது.

**சனாதிபதிக்குரிய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் முதலமைச்சரால் பிரயோகிக் கப்படுதலும் புரியப்படுதலும் நிறைவேற்றப்படுதலும்.**

37. (1) சனாதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறேதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதிருப் பாரெனக் கருதுவாரெனில், அத்தகைய காலத்தின் போது சனாதிபதி என்ற பதவியில், முதலமைச்சரைச் சனாதிபதி என்ற பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவர் நியமிக்க லாம் என்பதுடன், அத்தகைய காலத்தின் போது முதலமைச்சர் என்ற பதவியில் பதிற் கடமை ஆற்றுதற்கென ஏனைய அமைச்சர்களில் ஒருவரையும் நியமிக்கலாம்.

ஆயின், அப்போது முதலமைச்சர் பதவி வறிதாகவிருப்பின் அல்லது முதலமைச்சர் செய லாற்ற இயலாதிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது சனாதிபதியின் பதவிக்கான தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், அவர் சபாநாயகரை நியமிக்கலாம்.

(2) சனாதிபதி அவரது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதிருக்கின் றாரெனச் சபாநாயகரைக் கலந்தாலோசித்த பின்னர் பிரதம நீதியரசர் அபிப்பிராயப்படு வதோடு, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க நியமனமொன் றைச் செய்ய இயலாதவராயிருப்பின், அவரது அபிப்பிராயத்தை அவர் சபாநாயகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் அத்தகைய காலத்தின் போது முதலமைச்சர், சனாதிபதியின் பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிக ளையும் பிரயோகித்தலும் புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும். அத்துடன், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அத்தகைய நிய மனம் எதுவும் செய்யப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், அத்தகைய காலத்தின் போது முதலமைச்சர் என்ற பதவியில் பதிற்கடமை ஆற்றுதற்கெனப் பதில் சனாதிபதி, அமைச்சரவை உறுப்பினரொருவரை நியமித்தலும் வேண்டும்.

ஆயினும், அப்போது முதலமைச்சர் பதவி வறிதாகவிருப்பின் அல்லது முதலமைச்சர் செயலாற்ற இயலாதிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது சனாதிபதியின் பதவிக் கான தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும், சபாநாயகர் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி பற்றியனவான அரசியலமைப்பின் ஏற்பாடுகள் (32 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நீங்கலாக), அவை ஏற்புடையனவாக்கப்படக்கூடிய அந்த அளவுக்கு, சனாதிபதி என்ற பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அவ்வாறு பிரயோகித்துப்புரிந்து நிறைவேற்றும் ஆளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இந்த உறுப்புரையிலும் உறுப்புரை 38 (1) (ஆ), 40 (1)என்பவற்றிலும் "சபாநாயகர்" என்பது, பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள ஏதேனும் காலத்தின் போது, பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர் முன்னர் சபாநாயகர் என்ற பதவியை வகித்த ஆளையும் உள்ளடக்கும்.

**சனாதிபதி பதவியை வறிதாக்கல்**

38. (1) சனாதிபதியின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும்

(அ) அவர் இறப்பதன் மேல்

(ஆ) அவர், சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறந்தால்

(இ) அவர் இலங்கையின் ஒரு பிரசையாக இல்லாதொழிந்தால்

(ஈ) சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆள், தமது பதவிக்காலம் தொடங்கிய தேதியிலிருந்து (இரு கிழமைகளுக்குள்ளாக) வேண்டுமென்று பதவியேற்கத் தவறினால்

(உ) அடுத்துப் பின்வரும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அவர் பதவியினின்றும் அகற்றப்பட்டால் அல்லது

(ஊ) 130 (அ) என்னும் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றம் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவர் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை வெற்றும் வறிதுமானதெனத் தீர்மானிப்பதுடன் வேறெவரேனும் ஆள் சனாதிபதியாக முறையாகத் தெரிவு செய்யப்பட்டாரெனத் தீர்மானிக்காவிடில்.

(2)(அ)பாராளுமன்ற உறுப்பினரெவரும், சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம், மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாகச் சனாதிபதி அவரது பதவிக் குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளாரெனச் சார்த்துகின்ற, அல்லது சனாதிபதி, பின்வருவன வற்றைப் புரிந்ததற்கு குற்றவாளியாகவுள்ளாரெனச் சார்த்துகின்ற தீர்மானம் பற்றிய அறிவித்தலொன்றைக் கொடுக்கலாம்

1. அரசியலமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றம்,
2. தேசத்துரோகம் புரிந்த குற்றம்,
3. இலஞ்சம் பெற்ற குற்றம்
4. தமது பதவிக்குரிய அதிகாரங்களை துஷ்ப்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துஷ்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம் அல்லது
5. ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும், ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு

அத்துடன் சுமத்தப்பட்ட குற்றச்சார்த்தல் அல்லது குற்றச்சார்த்தல்கள் பற்றிய முழு விபரங்களையும் அத்தீர்மானம் தருதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தி னால் அதன் மீது விசாரணை நடாத்தப்படுதல் வேண்டுமெனவும் கோருதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய தீர்மானம் பற்றிய அவித்தலெதுவும், (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழிகினாலொழியவும் -

1. அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினர்களுக்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தாலொழியவும், அல்லது

2. பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையிலும் அரைவாசிப் பங்கினர்க் குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன், அத்தகைய குற்றச்சார்த் தல் அல்லது குற்றச்சார்த்தல்கள் நீதிமன்றத்தினால் அதன் மீது அல்லது அவற்றின் மீது விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கை செய்யப்படத்தகவுடையது அல்லது தகவுடையன எனச் சபாநாயகர் திருப்தியடைந்தாலொழியவும், சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுதலோ ஆகாது.

(இ) அத்தகைய தீர்மானம் உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்கா தோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்கினர்களுக்குக் குறையாதவர்கள் அதற்குச் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய தீர்மா னத்தில் அடங்கியுள்ள குற்றச்சார்த்தல் அல்லது குற்றச்சார்த்தல்கள் விசாரணைக்கும் அறிக்கைக்குமெனச் சபாநாயகரினால் உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) உயர் நீதிமன்றம் முறையான விசாரணையின் பின் (அத்தகைய விசாரணையின் போது தாமே தோற்றவும் தாமாகவே அல்லது தமது சட்டத்தரணி மூலம் தம் வழக்குரைக்கவும் சனாதிபதிக்கு உரிமையிருத்தல் வேண்டும்) அதன் தீர்மானம் பற்றி, (அவற்றிற்கான காரணங்களுடன் சேர்த்து) பாராளுமன்றத்துக்கு அறிக்கை யொன்றைச் செய்தல் வேண்டும்.

© உயர் நீதிமன்றமானது, சனாதிபதி உளக்குறைபாடு காரணமாக அல்லது உடற் குறைபாடு காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராயிருக்கிறார் என்று, அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச்சார்த்தல்களுள் எவற்றுக்கும் சனாதிபதி குற்றவாளியாகவிருக்கிறார் என்று தாம் அபிப்பிராயப்படுவதாகப் பாராளுமன் றத்துக்கு அறிக்கை செய்யுமிடத்து, பாராளுமன்றம், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டு பங்கினர்க்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் சனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.



### 04.புத்தரின் வரலாறு

அன்று பரதகண்டம் என அழைக்கப்பட்ட இந்திய தேசத்தில் மத்திய பிரதேச சாக்கிய ஜனபதத்தில் 'கபலவஸ்து' என்னும் அழகான நகரம் ஒன்று இருந்தது. இது இன்று நேபாளத்தின் லும்பிளி என்று அழைக்கப்படுகின்றது. இந் நகரை கி.மு 6ம் நூற்றாண்டளவில் சுத்தோதனர் மன்னன் ஆட்சி செய்து வந்தார். இவருக்கு மஹாமாயா தேவி, பிரஜாபதி கௌதமி என இருமனைவியர் இருந்தனர். ஒரு நாள் மாயாதேவியார் உறக்கத்திலிருந்த வேளை வெள்ளையானையின் இளங்கன்று ஒன்று தும்பிக்கையிலே ஒரு வெண்டாமரைப் பூவை ஏந்திக்கொண்டு பொன்நிறமான பாறைகளின் மேலே நடந்து மாளிகைக்குள் நுழைந்து, அவரை வலம் வந்து, வலபக்க வயிற்றினுள் நுழைந்ததாக கனவு கண்டார். விழித்தெழுந்து மாயாதேவியார் தாம் கண்ட கனவை அரசரிடம் கூறினார். அதைக்கேட்ட அரசன் தனது அரண்மனை யோதிடர்களை அழைத்து இதற்கான அர்த்தத்தை வினாவினான். அதற்கு அவர்கள் அரசியார் கருவுற்று இருக்கின்றமையை இக்கனவு உணர்த்துவதாகக் கூறினார்கள். மேலும் அரசியாருக்கு ஒரு ஆண் மகவு பிறக்கும் அந்தக் குழந்தை பெரியவனாகி துறவறத்தை மேற்கொண்டு பெறுதற்கரிய புத்த ஞானம் பெற்று புத்தராக விளங்குவார் என்றும் அவர்கள் கூறினார்கள். நாட்கள் நகர்ந்தன தேவியாரை அவரின் தாயின் ஊரான 'தேவதகா'நகருக்கு அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் இயற்கை எழில் கொஞ்சும் 'லும்பினி வனம் அவரைக் கவர்ந்தது. அங்கேயே அவர் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார். இந்நாள் கி.மு 563ம் ஆண்டு மே மாதத்துப் பூரணைதினமாகும். குழந்தை பிறந்த செய்தி கேட்டு கபிலவஸ்து மற்றும் தேவதகா நகரங்களில் இருந்த உறவினர்கள் அங்கு வந்து தாயையும் சேயையும் கபிலவஸ்து நகருக்கு அழைத்துச் சென்றனர்.

குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் அக்குழந்தைக்கு சித்தார்த்தன் என பெயர் சூட்டினர். இந் நிகழ்வுக்கு வந்த யோதிடர்கள் இக்குழந்தை வயது முதிர்ந்த கிழவர், நோயாளி, பிணம், துறவி போன்றோரைக் கண்டால் துறவு நிலையை மேற்கொள்வார் எனக் கூறினர். இதைக் கேட்ட தந்தை இந் நால்வகையினரும் சித்தார்த்தன் கண்களுக்கு தென்படாதவாறான ஏற்பாடுகளை செய்தார்.

சித்தார்த்தன் பிறந்து ஏழு நாட்கள் கழிந்தன. அவனது தாயாகிய மாயாதேவி காலமானார். இதனால் மகாபிரஜாபதி கௌதமி பட்டத்து ராணியானார். இவர் மாயாதேவியின் தங்கை யாவார். இவர்தான் சித்தார்த்தனை வளர்த்தார். சித்தார்த்தன் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தார். ஆண்டுகள் கழிந்தன.

மன்னன் சுத்தோதனர் தன் மகன் சித்தார்த்தன் கல்வியறிவிலும், வில்வித்தையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக அக்காலத்தில் இத் துறைகளில் சிறந்து விளங்கிய முனிவர்களிடம் அனுப்பி வைத்தார். ஆனாலும் சித்தார்த்தன் இயற்கையாகவே இவர்களை

விடவும் கல்வியறிவிலும் வில்வித்தையிலும் சிறப்புற்றவனாய் இருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர். 16 வயதான பொழுது தந்தை இவரை இல்லற வாழ்வில் விருப்பமுறச் செய்யும் வகையில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய மாளிகைகளை அமைத்துக் கொடுத்ததுடன் சாக்கிய குலத்தைச் சேர்ந்த மகாநாமரின் மகளாகிய யசோதரைக்கு முறைப்படி திருமணம் செய்தும் வைத்தார். இது தேவலோக இந்திரன் சசிதேவியினது மாளிகையை மிஞ்சிவிடும் அளவிற்கு சிறப்பாக இருந்தது. இவர்களது இல்லற வாழ்வின் பயனாய் இராகுலன் என்ற குழந்தை பிறந்தது. இச்செய்தி பாட்டனான சுத்தோதன மன்னனுக்கு மிகுந்த மன மகிழ்வைக் கொடுத்தது. ஆனாலும் தன் மகன் சித்தார்த்தன் துறவியாகி விடுவான் என்ற பயம் அவர் மனதை வாட்டிக் கொண்டே இருந்தது.

ஒரு நாள் சித்தார்த்தன் அரண்மனை பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க நினைத்தான். இதற்காக தன் தேர் சாரதியை அழைத்தான் இச்செய்தியை அறிந்த மன்னன் பூஞ் சோலையை மிகவும் அழகுபடுத்தினான். பூஞ்சோலையை நோக்கி சித்தார்த்தன் தேரில் சென்று கொண்டிருந்த போது வழியில் “இவர் எவற்றை கண்ணுற்றால் இல்வாழ்க்கையை வெறுத்து துறவு நிலையை விரும்பிச் சென்று புத்தராவார் என்று யோதிடர்கள் கூறினார்களோ! அவற்றை கண்ணுற்று வாழ்வில் வெறுபுற்றவராய்” மாளிகைக்குத் திரும்பினார். அவர் மனதில் எப்பொழுதும் “குமாரனே! விழித்துக்கொள், தெளிவு கொள். நிலையற்ற அழிந்து போகிற ஐம்புல இன்பங்களில் காலங்கழிக்காதே. நிலையாமையை உணர்ந்து நிலைபெற்ற இன்பத்தை நாடி மக்களுக்கு நல்வழி காட்டு. நீ வந்த வேலையை நிறைவேற்ற முற்படு.” என்று ஏதோ ஒரு குரல் தன் உள்ளத்தில் கூறுவதை உணர்ந்தார். இதுவும் அவர் கண்ணுற்ற காட்சிகளும் அவர் மனதை இல்வாழ்க்கை மீது முழுமையாக வெறுப்படைய வைத்து விட்டது. மனித வாழ்க்கையின் துன்பங்களை உணர்ந்துகொண்ட இவர் வாழ்வின் இரகசியத்தைக் காண துறவறத்தை மேற்கொள்ள முடிவெடுத்தார். பின்னர் மாளிகைக்குச் சென்று உறங்கிக் கொண்டிருந்த தன் மனைவியையும் மகனையும் பார்த்துவிட்டு அவர்களுக்குத் தெரியாமலும் தாம் துறவு கொண்டால் தமது சுற்றத்தாரும் மற்றவரும் மனம் வருந்துவார்கள் என்று தெரிந்தும் தாம் துறவுகொள்வது உலக மக்களின் நன்மைக்காகவே, என்பதனை உணர்ந்ததினாலும் 29வது வயதில் துறவறம் பூண்டார்.

நிலையற்ற அழிந்துபோகிற ஐம்புல இன்பங்களில் காலத்தைக் கழியாது நிலையாமையை உணர்ந்தவராய் நிலைபெற்ற இன்பத்தை நாடி அலைந்தார் இறுதியில் அது தமக்குள்ளேயே இருப்பதை உணர்ந்து கொண்டார். மூச்சுத் தியானத்தின் மூலம் மனதை ஒரு நிலைப் படுத்தினார். பல நாட்கள் யோக நெறியில் தவத்தில் அமர்ந்தார். இவரின் தவத்தைக் கண்டதால் சில சீடர்கள் அவருக்குக் கிடைத்தனர். வாரணாசியின் அருகிலுள்ள சாரநாத் என்னு மிடத்திலுள்ள “மான் பூங்கா”வில் முதன் முறையாக ஐவரைச் சீடர்களாக ஏற்றுக் கொண்டு தன் கொள்கையை அவர்களுக்குப் போதித்தார். தனது 35 வது வயதில் கயா என்னும் இடத்திலுள்ள ஓர் அரச மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்த பொழுது அவருக்கு போதி ஞானம் கிடைத்தது. புத்தர் ஞானம் பெற்ற இவ்விடம் இன்று புத்தகயா என்று அழைக்கப்படுகின்றது.

ஞானம் பெற்ற புத்தர் 45 ஆண்டுகள் போதனைகளை சீடர்களுக்கும் மக்களுக்கும் போதித்தார். தனது 80-வது வயதில், குசி நகரத்தில் கி.மு. 483-ல் பரிநிர்வாணம் அடைந்தார். குசி நகரத்தைச் சேர்ந்தவர்கள் இவருடைய உடலுக்கு இறுதிக் கடன் ஆற்றினர். இவரது கொள்கைகளினையும் போதைகளினையும் பின்பற்றி தோற்றம் பெற்ற மதமே பௌத்த மதம் ஆகும்.

**05.புற்றுநோய்**

(கடந்த இதழ் 23ன் தொடர்ச்சி...)

**1.இரத்தப் புற்றுநோய் (லியூகேமியா)**

லியூகேமியா என்பது இரத்தம் மற்றும் எலும்புமச்சைகளில் ஏற்படும் புற்றுநோயாகும். சிறுபராய கடுமையான நிணநீர் லியூக்கேமியா (All) அதிகளவில் சிறுவர்களைப் பாதிக்கின்றது. இப்புற்றுநோயானது பாரியளவு எண்ணிக்கையிலான முதிர்வடையாத நிணநீர்க் கலங்களை எலும்பு மச்சை உற்பத்தி செய்கின்ற போது ஏற்படுகின்றது. இம் முதிர்ச்சியடையாத, பிரிவடைகின்ற நிணநீர்க் கலங்கள் எலும்புமச்சையினை நிரப்பி ஆரோக்கியமான குருதிக் கலங்களை உருவாக்குவதிலிருந்து அதனைத் தடுக்கின்றது.

**அறிகுறிகள்**

- ❖ காய்ச்சல்
- ❖ மூக்கிலிருந்து அடிக்கடி இரத்தம் வடிதல்
- ❖ முரசிலிருந்து இரத்தம் வடிதல்
- ❖ இரத்தம் வடிதலினால் உருவாகின்ற தோலிற்குக் கீழ் தட்டையான, ஊசிமுனை, கரும் - சிவப்பு புள்ளிகள்
- ❖ எலும்பு வலி அல்லது மூட்டுவலி
- ❖ கழுத்தில், கமக்கட்டில், வயிற்றில் அல்லது கவட்டில் நோவற்ற கட்டிகள்.
- ❖ பசியின்மை, எடைகுறைதல்
- ❖ வீக்கமடைந்த நிணநீர்க் கணுக்கள்
- ❖ விலா எலும்புகளுக்குக் கீழ் நோவு அல்லது நிறைந்தாற் போல் உணர்தல்.
- ❖ பலவீனம், களைப்பு,
- ❖ மயக்க உணர்வு அல்லது உணர்விழத்தல்.
- ❖ தலைவலி, திடீர் நோய்த்தன்மை, வாந்தி.
- ❖ தொடர்ச்சியான நோய்த் தொற்று
- ❖ எளிதாக சிராய்த்தல் அல்லது இரத்தம் வடிதல்

- ● ஆபத்துக் காரணிகள்
- ◆ குடும்ப வரலாறு
- ◆ கதிர் வீச்சு படுதல்

❖ **அறிவுறுத்தல்கள்**

சிறுபராய தீவிர இரத்தப் புற்றுநோயின் பல அறிகுறிகள் வேறு காரணங்களாலும் ஏற்படலாம். அத்துடன், அவற்றின் அநேகமான அறிகுறிகள் லியூக்கேமியாவினால் தோற்றுவிக்கப் படுவதில்லை என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும்.

எனினும், காரணத்தை அறிவதற்கு அவசியமெனில், தகுந்த சிகிச்சையளிப்பதற்கு இவ் அறிகுறிகளை வைத்தியர் பரிசோதிப்பது முக்கியமானதாகும்.

**2.வாய்ப்புற்றுநோய்**

வாய்மூல புற்றுநோய் எனவும் அறியப்படுகின்ற வாய்ப் புற்றுநோயானது நாக்கு, வாய், உதடுகள், கன்னங்களில் அல்லது முரசுகளின் மேற்பரப்பில் கட்டி உருவாக்கமாகும். பெண்களை விட ஆண்களுக்கு பொதுவாக வாய்ப்புற்றுநோய் அதிகளவில் காணப்படுகின்றது.

- **அறிகுறிகள்**

❖ வாயின் உள்பக்க கடைவாயில் அல்லது நாக்கின் உட்புற உறைகளின் மீது சிவப்பு அல்லது வெள்ளைத் தோல் திட்டுக்கள்
❖ வாயில் அல்லது நாக்கில் புண்கள்
❖ வாயில் அல்லது நாக்கில் கட்டி
❖ வாயினுள் அசாதாரண எரிவு

- **ஆபத்துக் காரணிகள்**

◆ புகைப்பிடித்தல் அல்லது புகையிலை உள்ளடங்கியுள்ள பொருட்களைப் பாவித்தல்.
◆ மதுபானம் அருந்துதல்.
◆ PV வைரசு தொற்று.
◆ வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு மெல்லுதல்.
◆ குறைந்த போசணை.
◆ பலவீனமடைந்த நோய் எதிர்ப்புத் தன்மை முறைமை.

- **அறிவுறுத்தல்கள்**

வைத்தியர் அல்லது பல் நல மருத்துவர் ஊடாக பரிசோதனை செய்வதன் மூலம் வாய்க்குழி மற்றும் தொண்டை ஆகியவற்றில் புற்றுநோய் அல்லது முந்திய நோய்கள் அறியப்படக் கூடியன. ஏதேனும் அசாதாரணமான பகுதி பற்றி பரிசோதிப்பதற்கு ஒவ்வொரு மாதமும் வாயினை கண்ணாடியில் பார்த்து பரிசோதித்துக் கொள்ளலாம் என சில பல்மருத்துவர்களும், வைத்தியர்களும் பரிந்துரைக்கின்றனர். விசேட மாக அதிகளவு மது அருந்துவொராக அல்லது புகைப்பிடிப்பவராக இருப்பவராயின், மேற் குறிப்பிட்ட அறிகுறிகள் மூன்று வாரங்களுக்குள் குணமடைய வில்லையாயின் வைத்தியரின் ஆலோசனையைப் பெறலாம்.

(ஆதாரம் நன்றி)

**06.இத்தாலி ரோம் நகர அரங்கம் (கொலோசியம்)**

இத்தாலி நாட்டின் ரோம் நகரில் அமைந்துள்ள அரங்கம் உலக அதிசயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இதனை ரோம் நகரின் கொலோசியம் என்றும் அழைப்பார். இது ரோமானிய மன்றத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இவ் அரங்கத்தின் கட்டுமானப் பணிகள் கி.பி. 72ம் ஆண்டளவில் ரோமை ஆண்ட பேரரசர் வெஸ்பாசியின் ஆட்சிக் காலத்தில் தொடங்கி கி.பி .80 ஆம் ஆண்டில் அவரது வாரிசான டைட்டஸின் காலத்தில் நிறைவுற்றது. மேலும் இக் கட்ட டத்தில் டோமிடியன் (81-96) ஆட்சிக் காலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டது. இந்த மூன்று பேரரசர்கள் ஃபிளவியன் வம்சத்தவர்களாக அறியப்படுகின்றனர்.



நீள்வட்ட வடிவமாக இக் கட்டடம் பைஞ்சுதை மற்றும் மணலினால் கட்டப்பட்டது. கூரை யற்ற இக் கட்டடத்தின் மேற்பகுதிக்கு கப்பல்களில் பயன்படுத்தப்படும் பாயினை தேவைப்படும் வேளைகளில் பயன்படுத்துவர். சுமார் நூற்றைம்பது அடி உயரமான இக்கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் விலங்குகளையும், அடிமைகளையும் அடைத்து வைக்கும் சிறிய அறைகள் இருந்தன.

இது தொழில்முறைப் போர்வீரர்கள், தங்களுக்குள்ளும், விலங்குகளுடனும், பயங்கர மான குற்றவாளிகளுடனும், சண்டையிடுவதற்காகக் கட்டப்பட்டது ஆகும். இக் கட்டடத்தின் மத்தியில் உள்ள களத்திலேயே நிகழ்ச்சி நடக்கும். இதனைப் பார்ப்பதற்காகக் கூடும் மக்க ளுக்காக நடுவில் உள்ள களத்தைச் சுற்றி வட்ட வடிவிலான நான்கு பார்வையாளர் பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் முதல் பகுதி அரசர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும், இரண்டாம் பகுதி பெரும் நிலப்பிரபுக்களும், முக்கியமானகளுக்கும், மூன்றாம் பகுதி தொழிலா ளர்களும், நான்காம் பகுதி பெண்களுக்கும் என ஒதுக்கப்பட்டிருந்தது. இவ் அரங்கம் 65,000 பார்வையாளர்கள் வரை இருக்கக் கூடிய வசதியினைக் கொண்டது. இவர்கள் வந்து செல் வதற்கு வசதியாக பல நுழைவு வாயில்கள் இருந்தன. ஆரம்ப, மற்றும் இடைக்காலங்களில் பொழுதுபோக்கு இடமாக விளங்கிய இவ்வரங்கம் பின்னர் வீடுகள், பட்டறைகள், மத ஒழுங்கு, கோட்டை, கிறிஸ்தவ ஆலயம் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களின் சில நடவடிக்கைகள் என்பனவற்றால் சேதமடைந்த நிலையில் காணப்படும் இவ்வரங்கம் இன்றும் ரோமைப் பேரரசின் ஒரு சின்னமாக உள்ளது. இது ஒரு சுற்றுலா இடமாகவும் விளங்குகின்றது.

## 07. விண்வெளி

நிலவில் கால் பதித்து 50 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் இதனால் மனிதகுலம் பெற்றுள்ள நன்மைகள் என்ன?

1969 ஜூலை 20 ஆம் திகதி மனிதன் நிலவில் கால்வைத்த மாபெரும் அறிவியல் தொழில்நுட்ப சாதனை நிகழ்ந்த நாள். இது நம்முடைய தினசரி வாழ்வைப் பாதித்த முக்கிய மான மைல்கல்லாகவும் உள்ளது. இன்றைய பண மதிப்பில் 200 பில்லியன் டொலர்கள் செல வில் முன்னெடுக்கப்பட்ட அப்போலோ செயல்திட்டம், நீங்கள் ஒருபோதும் அறிந்திராத துறைகளில் ஆச்சரியம் ஏற்படுத்தும் முன்னேற்றங்களையும் தொடங்கி வைத்தது.

அவற்றில் சிலவற்றை இங்கு நாம் காண்போம்.

**1. சுத்தம் செய்வதில் குறைந்த சிக்கல்கள்**

வயர் இல்லாத மின்சார உபகரணங்கள் அப்போலோ விண்கலப் பயணத்திலேயே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்றைக்கு நாம் அறிந்திருக்கும் பொருட்களை உருவாக்கு வதில் அவை உண்மையில் உதவிகரமாக இருக்கின்றன.

உதாரணமாக, மின்சார உபகரணங்கள் தயாரிக்கும் 'பிளாக் ஶ டெக்கர்' என்ற அமெரிக்க நிறுவனம் வயர் இல்லாத துளையிடும் கருவியை 1961ல் அறிமுகம் செய்தது. ஆனால் அதே நிறுவனம் செயற்கைக்கோளில் இருந்து முக்கிய சாம்பிளை எடுக்க விசேஷ துளையிடும் கருவியை நாசாவுக்கு வழங்கியது. என்ஜின் மற்றும் பேட்டரிகள் உருவாக்கப்பட்டதால் கிடைத்த அறிவு, புதிய வகையிலான வீட்டு உபயோகப் பொருட்களைத் தயாரிக்க பிளாக் ஶ டெக்கர் நிறுவனத்துக்கு உதவிகரமாக இருந்தது. வயர் இல்லாத வர்த்தக ரீதியிலான, தரையை சுத்தம் செய்யும் கருவியை 1979ல் அறிமுகம் செய்ததும் இதில் அடங்கும். குப்பையை சுத்தம் செய்யும் இந்தக் கருவி 30 ஆண்டுகளில் 150 மில்லியன் எண்ணிக்கை அளவுக்கு விற்பனை ஆகியுள்ளது.

**2. நேரத்தைப் பின்பற்றுவதில் மேம்பாடு**

நிலவில் கால் பதிப்பதற்கு துல்லியமும் மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஒரு நொடியில் இம்மி பிசகினாலும் விண்வெளி வீரர்களுக்கு வாழ்வா, சாவா என்ற நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, இந்த லட்சியப் பயணத்தின் கட்டுப்பாட்டில் மிகவும் துல்லியமான கடிகாரங்கள் நாசாவுக்குத் தேவைப்பட்டன. குவார்ட்ஸ் கடிகாரங்கள் மூலம் அதற்கான தீர்வு கிடைத்தது. முரண்பாடாக, அப்போலோ 11 லட்சியப் பயணத்தில் ஆம்ஸ்ரோங்கும், அவருடன் நிலவில் நடந்த எட்வின் ஆல்டிரினும் அணிந்திருந்தவை மெக்கானிக்கல் கைக்கடிகாரங்கள்.

**3. சுத்தமான தண்ணீர்**

அப்போலோ விண்கலத்தில் பயன்படுத்தப்பட்ட, நீரை சுத்தம் செய்யும் தொழில்நுட்பம் இப்போது பாக்றீரியாக்கள், வைரஸ்களைக் கொல்லவும், நீர்நிலைகளில் பாசிகளை அகற்றவும் பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. சில்வர் அயன்களின் அடிப்படையில், குளோரின் அல் லாத தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் செயல் திட்டத்தின் முன்னோடியாக அது அமைந்தது. இப்போதும் அந்தத் தொழில்நுட்பம் நீச்சல் குளங்களிலும், செயற்கை நீருற்றுகளிலும் உலகெங்கும் பயன்படுத்தப் படுகிறது.

**4. அதிக காலம் உழைக்கக் கூடிய கூஷ்க்கள் கிடைத்திருக்கின்றன.**

நிலவில் நடந்தபோது பாதுகாப்பு கிடைப்பதற்காக அப்போலோ விண்கலத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் பயன்படுத்திய 1965 ஆம் ஆண்டு மாடலில் உள்ள உடைகளையே விண்வெளி வீரர்கள் இப்போதும் அணிகிறார்கள். ஆனால், கூஷ் தயாரிப்பில், நீடித்து உழைப்பதாகவும் அதிர்வை தாங்கிக் கொள்ளக் கூடியதாகவும் விளையாட்டு வீரர்களுக்கான கூஷ்க்கள் கடந்த சில தசாப்தங்களில் விற்பனைக்கு வந்திருக்கின்றன.

**5. தீ பிடிக்காத துணிகள்**

1967 ஆம் ஆண்டு அப்போலோ 11 பயிற்சியின் போது ஏற்பட்ட தீ விபத்தில், அதில் இருந்த மூன்று விண்வெளி வீரர்கள் மரணம் அடைந்த சம்பவம், அமெரிக்க விண்வெளி செயல் திட்டத்தை அதிர்ச்சியடையச் செய்துவிட்டது. ஆனால், அதன் காரணமாக நாசா புதிய வகையிலான, தீப்பிடிக்காத துணியை தயாரித்தது. அது பூமியில் பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.

சொல்லப் போனால், விண்வெளி வீரர்களுக்குப் புத்துணர்வு தருவதற்கான குளிரூட்டல் நடைமுறைகள் இப்போது திசுக்கள் கடினமாகிவிட்ட நோயாளிகள் உள்பட எல்லா

வகை மக்களுக்கும் உதவியாக இருக்கின்றன - குதிரைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றன.

### 6. உயிரைக் காக்கும் இருதய தொழில்நுட்பத்தில் உதவி

உடலில் பொருத்தக் கூடிய உதறல் நீக்கும் உபகரணங்கள், அபாயகரமாக அசாதாரண இருதய துடிப்பு உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்க தினசரி பயன்படுத்தப்படும் உபகரணங்கள் முதன்முறையாக உருவாக்கப்பட்டன. இதற்கு நாசாவின் சிறிய வடிவ மின்சுற்றமைப்புத் தொழில்நுட்பத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். அவசர நேரத்தில் பயன்படுத்தப்படும் உதறல் நீக்கி கருவிகளில் இருந்து மாறுபட்டு, சிறிய அளவிலான கருவிகள் நோயாளியின் தோலுக்கு அடியில் பதித்து, இருதயத் துடிப்பு கண்காணிக்கப் படுகிறது. அசாதாரண நிலை ஏதும் இருந்தால் மின்சார தூண்டுதல்கள் மூலம் சரி செய்யப்படுகின்றன.

### 7. நமது மதிய உணவு குறைந்த அளவு

நிலவை அடைய வேண்டும் என்ற முனைப்பில் இருந்த நாசா, இடத்தை மிச்சப்படுத்துவதற்கான வழிகளை சிந்திக்க வேண்டியிருந்தது. முடிந்த வரையில் விண்கலத்தின் எடையைக் குறைவாக வைத்திருக்க வேண்டியிருந்தது. அதனால் அப்போலோ லட்சியத் திட்டங்களுக்கான உணவு பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. புதன் மற்றும் gemini - க்கான முந்தைய சிறிய பயணங்களுக்கு (1961 - 66) மாறாக நிலவுக்கான பயணம், விண்வெளியில் 13 நாட்களை எடுத்துக் கொண்டது. உறை- உலர் நடைமுறையில் இதற்குத் தீர்வு கிடைத்தது. சமைத்த உணவுகளில் இருந்து நீர்ச்சத்தை குறைந்த வெப்ப நிலையில் பிரித்துவிடுவது- சாப்பிடுவதற்கு சுடுநீர் சேர்த்தால் போதும். அது நீல் ஆம்ஸ்ரோங்கிற்கு நல்லதாக இருந்தது. மலைப் பயணம் செல்பவர்கள் மற்றும் முகாம்களுக்குச் செல்லும் படையினருக்கும் இது நல்லதாக அமைந்துவிட்டது. குறிப்பாக இது 4 டொலர் என்ற குறைந்த விலையில் கிடைக்கிறது.

### 8. உயிர்காக்கும் போர்வை

சூரியனின் வெப்பத்தில் இருந்து அப்போலோ நிலவு விண்கலத்தைக் காப்பதற்கு விண்வெளி நிறுவனம் பயன்படுத்திய பளபளப்பான இன்சுலேட்டருக்கு விண்வெளி போர்வை என பட்டப்பெயர் சூட்டினர். தகடு படலத்தால் பாதியளவுக்கு மூடியிருப்பதைப் போல விண்கலம் தோற்றம் அளித்தது. இப்போது நாம் காணும் உயிர்காக்கும் போர்வைகளைத் தயாரிப்பதற்கான உந்துதல் அதில் இருந்து தான் ஏற்பட்டது.

பிளாஸ்டிக், பிலிம் மற்றும் அலுமினியத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விண்வெளி போர்வைகள் இப்போது விண்வெளி வீரர்களைவிட அதிகமானவர்களைக் காப்பாற்றுகின்றன. அவசரகால தெர்மல் போர்வைகளை உருவாக்குவதற்கு நாசாவின் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இவை மீட்பு மற்றும் மனிதாபிமான உதவிப் பணிகளில் பயனுள்ளதாக இருக்கின்றன. நீண்ட தொலைவுக்கு ஓடுபவர்களுக்கு உடலில் வெப்பக் குறைபாடு ஏற்படாமல் இது கையடக்கமாக இருப்பதால், மரதன் ஓட்ட நிகழ்வுகளின் போது இவை அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. நோயாளிகள் மற்றும் அலுவலர்களின் உடல்நிலையை மேம்படுத்துவதற்கு, இந்த விண்வெளி தொழில்நுட்பத்தை மருத்துவமனைகளில் அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

**08.அரசமரம்**



உயிரியல் வகைப்பாடு
திணை: தாவரம்
பிரிவு: மக்னோலியோபைட்டா
வகுப்பு: மக்னோலியோப்சிடா
வரிசை: ரோசாலெஸ்
குடும்பம்: மோரேசியே (Moraceae)
பேரினம்: பைக்கஸ்
இனம்: பை. ரிலிஜியோசா
தாவரவியல் பெயர்: ஃபைக்கஸ் ரிலிஜியோசா
(Ficus religiosa Linn.)

பண்டைய காலத்திலிருந்து வழிபடப்பட்டு வரும் மரங்களில் ஒன்று அரசமரம். இம்மர மானது இந்தியா, இலங்கை, மியான்மர், நேபாளம், பாகிஸ்தான் தென்மேற்குச் சீனா, இந்தோ னிசியா மற்றும் கிழக்கு வியட்நாம் போன்ற நாடுகளில் அதிக அளவில் காணப்படுகின்றது. இம் மரத்தை ராஜ விருட்சம், அஸ்வத்தம், அச்சுவத்தம், திருமரம், போதி, பேதி, கணவம், சராசனம், மிப்பலம் எனப் பல பெயர்களால் அழைப்பர்.

30 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய இம் மரத்தின் அடி விட்டம் 3 மீட்டர் வரை இருக்கும். இதன் பட்டை சாம்பல் நிறமாகக் காணப்படும். இதனை முன்னோர்கள் தோல் பதனிடுவதற்கும், துணிகளுக்குச் சாயம் இடுவதற்கும் பயன்படுத்தினர். பாலுள்ள இம்மரத்தின் இலைகள் மெல்லிய இதய வடிவானவை. இவற்றின் காம்புகளுக்கிடையே கனிகள் காணப்படும். இதனை பறவைகள் விரும்பி உண்கின்றன. இம்மரத்தின் காய்ந்த குச்சிகள் சமயச் சடங்குகளின் போது யாகம் வளர்க்கப் பயன்படுத்தப்படுகின்றது.

இம்மரத்தின் பரந்து விரிந்த கிளைகள் சுமார் 1 கிலோ மீட்டர் சுற்றளவு பிரதேசத்தில் ஒட்சிசன் பற்றாக்குறையை நீக்க வல்லது. நன்கு வளர்ந்த அரச மரம் நாளொன்றுக்கு 1808 கிலோ காபனீர் ஒட்சையிட்டை உள்வாங்கி 2400 கிலோ ஒட்சிசனை வெளியிடுவதாக நவீன ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் இந்த ஒட்சிசனானது காற்று மண்டலத்தில் கலப்பதால், காலை நேரங்களில் இம்மரத்தை சுற்றி வரும்போது நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாடுகளைத் தூண்டி உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது. இதன் இலை, வித்து, வேர், பட்டை அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை.

**அரசமரத்தின் பயன்கள்:**

- அரசமரத்தை சுற்றினால் குழந்தைப் பேறுகிடைக்கும் என்பது ஒரு நம்பிக்கை. இதன் காரணமாகவே “அரசினை நம்பி புருசனை கைவிட்டாள்” என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது. இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளளது. அரசமரம் வெளியிடும் காற் றில் பெண்களின் மாதச்சுழற்சி மற்றும் அது சம்பந்தமான சுரப்பிகள் சீரடைகின்றன என்று நிரூபிக் கப்பட்டுள்ளது
- “அரச மரத்தை சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தாள் “என்ற பழமொழி உண்டு. இதன் பொருள் அரச மரம் குலம் தழைக்கச் செய்யும் பிள்ளைப் பேற்றை உண்டாக்கும்.

- சூலகத்தை சீராக்கும். சூலகத்தில் உண்டான நோய்களை போக்கும் என்பதே. அரச மரத்தின் காற்று கருப்பை கோளாறுகளை போக்கும் தன்மையுடையது. அதுபோல் மூளையின் செயல்பாடுகளையும் தூண்டி, மன அமைதியைக் கொடுக்கும் குணமும் இதற்கு உண்டு.
- அரசமரத்தின் இலைக் கொழுந்தை அரைத்து, மோருடன் கலந்து குடிக்க வயிற்று வலி யும், அதையே பசும் பாலில் இட்டுக் காய்ச்சி சர்க்கரை சேர்த்துக் குடிக்க காய்ச்சலும் குண மாவதுடன் நீரில் கொதிக்க வைத்து கஷாயம் செய்து அருந்தினால் உடல் வன்மை யாகும்.
- பழுத்த இலைகளை எரித்தெடுத்த தூளினை தேங்காய் எண்ணெயில் கலந்து தீப்புண், தழும்புகள் மற்றும் வலி உள்ள இடங்களில் பூசிவர குணமாகும்.
- அரசம்பட்டையை வெந்நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி வாய் கொப்பளித்து வர வாய்ப் புண் குணமாகும்.
- இப் பட்டையை வறுத்துத் தூளாக்கி தேங்காய் எண்ணெயில் குழைத்துப் பூசிவர புண், சொறி, சிரங்கு போன்றவை குணமாகும். இதில் ஒரு கரண்டி தூளினை 200 மில்லி லிட் டர் தண்ணீரில் காய்ச்சி வடிகட்டி பால் சர்க்கரை சேர்த்துக் குடித்துவர இருமல் தணியும்.
- அரசமரப் பட்டையை இடித்து நீரில் போட்டு கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் சொறி, சிரங்கு குணமாகும். உடல் வெட்கை குறையும். வியர்வை நாற்றம் நீங்கும். சருமம் பளபளப்பதுடன், சரும நோய்கள் அண்டாது. சருமத்தில் சுருக்கம் ஏற்படாது.
- அரசமரக் குச்சியைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி நீரில் விட்டுக் காய்ச்சி வடிகட்டி, அதில் தேன் சேர்த்துக் குடிக்க பித்தம் தணியும்.
- அரச விதையைப் பாலில் கலந்து குடித்து வர ஆண்மை அதிகரிக்கும்.
- அரசமரக் கொழுந்து, ஆலங்கொழுந்து அத்திக்கொழுந்து இவற்றைச் சம அளவில் எடுத்து அரைத்து உட்கொண்டு வந்தால் மூலத்தில் ரத்தம் வடிதல் நிற்கும்.
- அரச விதைகளைக் காயவைத்து இடித்து பொடியாக்கி வைத்துக்கொண்டு தினமும் பாலில் கலந்து உண்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். மலத்துடன் இரத்தம் வெளியேறுதல் குண மாகும்.
- அரச விதை, ஆலம் விதை சம அளவு எடுத்து அரைத்து. அதைப் பாலில் கலந்து உண்ண ரத்த வாந்தி நிற்கும்.
- கலப்பட குங்குமம் இடுவதால் நெற்றியில் தோல் நீல நிறமாக மாறுவதுடன் அந்த இடத்தில் அரிப்பும் ஏற்படும். இதற்கு அரச மரத்தின் பட்டையை நீரில் கரைத்து, பாதிப்பு ஏற்பட்ட இடத் தில் வைத்து வர, பழைய நிறம் கிடைக்கும்.
- காலில் உள்ள பித்த வெடிப்புகள் மீது அரசம் பாலைக் தொடர்ந்து தடவி வந்தால் அது விரை வில் குணமாகும்.
- அரசமரத்தின் பட்டை, வேர், விதை இவற்றை பாலில் இட்டு காய்ச்சி அதில் தேன் கலந்து தொடர்ந்து 1 மண்டலம் அருந்தி வந்தால் தாது விருத்தியடையும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் நீங்கும்.



## 09.இங்கிலாந்து உலகக்கோப்பையை வெல்ல காரணமான மேற்கிந்திய வீரர்

இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்ற பரபரப்பு மிகுந்த உலகக்கோப்பை இறுதி போட்டி சமன் ஆனதால், சூப்பர் ஓவர் முறையில் ஆட்டத்தின் முடிவை நிர்ணயிக்க தீர்மானிக்கப்பட்டது.

முதலில் பற் செய்த இங்கிலாந்து 15 ரன்கள் எடுக்க, 16 ரன்கள் எடுத்தால் நியூசிலாந்து உலகக்கோப்பையை வெல்லும் என்ற நிலையில் ரசிகர்கள் மிகவும் ஆவலாக காத்திருந்தனர். இங்கிலாந்து அணியின் சார்பாக யார் சூப்பர் ஓவரை வீசுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. கிறிஸ் வோக்ஸ், பிளங்கட் போன்ற அனுபவம்வாய்ந்த பந்து வீச்சாளர்களை விட இங்கிலாந்தின் கேப்டன் மோர்கனின் தேர்வு ஜோஃப்ரா ஆர்ச்சராக இருந்தது.

சூப்பர் ஓவரின் முதல் பந்து வைடாக அறிவிக்கப்பட, மீண்டும் வீசப்பட்ட முதல் பந்தில் இரண்டு ரன்கள் எடுக்கப்பட்டது. இரண்டாவது பந்தில் சிக்ஸர் அடிக்கப்பட, இங்கிலாந்து ரசிகர்கள் கவலையில் ஆழ்ந்தனர்.

ஆனால், அதற்குப்பிறகு மிகவும் சிறப்பாக பந்து வீசி நியூசிலாந்தை கட்டுப்படுத்திய ஜோஃப்ரா ஆர்ச்சர், இறுதி பந்தில் தனது மிக சிறந்த பங்களிப்பை வெளிப்படுத்தினார்.

உலகக்கோப்பையை வெல்ல 44 ஆண்டுகள் காத்திருந்த இங்கிலாந்தின் சார்பாக மிகவும் முக்கியமான மற்றும் பரபரப்பான சூழலில் சூப்பர் ஓவரை வீசிய ஜோஃப்ரா ஆர்ச்சர் மே 2019-இல்தான் முதல் முறையாக இங்கிலாந்து அணியின் சார்பாக விளையாடினார்.

ஆம், இரண்டு மாதங்களுக்கு முன்பு சர்வதேச போட்டியில் அறிமுகமான ஜோஃப்ரா ஆர்ச்சர்தான் தற்போது இங்கிலாந்தின் ஹீரோவாக கொண்டாடப்படுகிறார்.

பார்படோஸை சேர்ந்த ஜோஃப்ரா ஆர்ச்சர், மேற்கிந்தியதீவுகள் அணியின் 19 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் விளையாடியவர்.

காயம் காரணமாக அவர் சிறிதுகாலம் விளையாட முடியாமல் போனது. இந்த காலகட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக அவர் விளையாடுவது மேலும் சிரமமானது.

இந்நிலையில், அவர் இங்கிலாந்து அணிக்காக விளையாட முயற்சித்தார். சஸக்ஸ் அணிக்காக அவர் முதல்தர போட்டிகளில் விளையாடினார்.

ஆஸ்திரேலியாவில் நடக்கும் பிக்பாஷ் தொடரில் விளையாட தொடங்கியதும் உலக அளவில் ஜோஃப்ரா ஆர்ச்சர் மேலும் கவனம் பெற்றார்.

2018 ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் அணிக்காக விளையாட அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். மும்பை அணிக்கு எதிராக தான் அறிமுகமான முதல் போட்டியிலேயே ஜோஃப்ரா ஆர்ச்சர் முத்திரை பதித்தார். 3 விக்கெட்டுகளை எடுத்த அவர் அந்த போட்டியின் நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

2019 ஐபிஎல் தொடரிலும் ராஜஸ்தான் அணிக்காக அவர் விளையாடினார்.

இதனிடையே 2019 உலகக்கோப்பை அணிக்கு இங்கிலாந்து அணி அறிவிக்கப் பட்டது. 15 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில் முதலில் ஆர்ச்சர் இடம்பெறவில்லை.

பிறகு மே மாதத்தில் இங்கிலாந்து அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்ட போது அணியில் ஜோஃப்ரா ஆர்ச்சர் சேர்த்து கொள்ளப்பட்டார்.

அதுவரை 3 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடிய ஜோஃப்ரா ஆர்ச்சர், உலகக்கோப்பை அணியில் சேர்த்து கொள்ளப்பட்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஆரம்ப போட்டிகளிலேயே ஜோஃப்ரா ஆர்ச்சர் சிறப்பாக பங்களித்தார். இறுதிப்போட்டி வரை 10 போட்டிகளில் விளையாடிய அவர் 19 விக்கெட்டுகளை எடுத்தார்.

தனது அணியின் சார்பாக அதிக அளவில் விக்கெட்டுகள் எடுத்தது மட்டுமல்ல நடப்பு உலகக்கோப்பை தொடரில் மிகவும் சிக்கனமாக பந்துவீசியும் ஜோஃப்ரா ஆர்ச்சர் இங்கிலாந்தின் வெற்றிக்கு பல போட்டிகளில் காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய தீவுகளில் பிறந்து இங்கிலாந்து அணிக்காக விளையாடிய முதல் வீரர் ஜோஃப்ரா ஆர்ச்சர் அல்ல.

ஆனால், அணிக்காக சர்வதேச போட்டிகளில் அறிமுகமான இரண்டே மாதங்களில் உலகக்கோப்பை இறுதி போட்டி போன்ற அழுத்தம் நிறைந்த போட்டியில் முக்கிய தருணத்தில் பந்துவீச அழைக்கப்பட்டதும், இங்கிலாந்தின் நெடுநாள் கனவை அவர் நிறைவேற்றியதும் சாதாரண நிகழ்வு அல்ல.

(நன்றி - BBC)

**10. அவுஸ்திரேலியா**

- அமைவிடம்- அவுஸ்திரேலியா இந்திய, பசிபிக் பெருங்கடலால் சூழப்பெற்ற அவுஸ்திரே லியா கண்டத்திலுள்ள ஒரு நாடாகும்.
- பரப்பளவு மொத்தம்- 7,617,930 சதுர கிலோமீட்டர்
- தீவுகள் தவிர்ந்தது- 34,218 சதுர கிலோமீட்டர்
- சனத்தொகை- 23.2 மில்லியன் (2013 மதிப்பீட்டின் படி)
- தலைநகரம்- கான்பரா
- தேசிய மொழி- ஆங்கிலம்



- நாணயம்- அவுஸ்திரேலிய டொலர்
- தேசியப்பறவை- ஈமியூ
- தேசிய விலங்கு- கங்காரு
- தேசிய மலர்- தங்க வாட்டில் மலர்
- தேசிய நிறம்- பச்சையும் பொன்னிறமும்
- தேசிய தினம்- ஜனவரி 26

❖ Australis என்ற இலத்தீன்மொழிச் சொல்லில் இருந்து உருவானதே ஆஸ்திரேலியா. இதன் பொருள் தெற்கே என்பது ஆகும்.

❖ உலகின் மிகப் பெரிய தீவுகளில் ஒன்றான அவுஸ்திரேலியா, பெருநிலப்பரப்பையும், தாஸ் மானியா தீவையும், இந்திய, பசிபிக் பெருங்கடல்களில் உள்ள சில சிறிய தீவுக ளையும் உள்ளடக்கிய ஒரு நாடாகும்.

❖ பாலைவனங்கள் நிறைந்த வரட்சி மிகுந்த இந் நாட்டில் எண்ணெய் வளமும், கனிம வளமும் நிறைந்து காணப்படுகின்றது.

❖ அவுஸ்திரேலியாவில் 500 வகையான பழங்குடியினர் காணப்பட்டனர். இவர்கள் பயன் படுத்திய மொழிகளில் 70 மொழிகள் இன்றும் வழக்கில் உள்ளதாம்.

❖ இந் நாட்டில் இற்றைக்கு ஏறத்தாள 42,000 தொடக்கம் 48,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் குடியேறி வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

❖ 1788ம் ஆண்டு ஜனவரி 26ல் ஜாக்சன் துறையில் ஆர்தர் பிலிப் என்பவரால் நியூ சவுத் வேல்ஸ் என்ற முடியாட்சிக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.

❖ இந்நாளே பின்நாளில் ஆஸ்திரேலியாவின் தேசியநாள் ஆக்கப்பட்டது.

❖ 19ம் நூற்றாண்டில் மேலும் பல புதிய பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை சுயாட்சி கொண்ட ஐந்து பிரித்தானியக் குடியேற்றப் பகுதிகளாக்கப்பட்டன.

❖ 1911 ஆம் ஆண்டில் தெற்கு ஆஸ்திரேலியாவில் இருந்து வட மண்டலம் பிரிக்கப்பட்டமை யால் வட மண்டலம், ஆஸ்திரேலிய தலைநகர் மண்டலம் என இரண்டு மண்டலங்க ளானது.

❖ ஜனவரி 1, 1901 இல் இவ் ஆறு தனித்தனியான குடியேற்றப் பகுதிகளும் ஒன்றிணைந்து பொதுநலவாய ஆஸ்திரேலியா என்ற திறந்த மக்களாட்சி அரசியலமைப்புடன் கூடிய கூட்டமைப்பு அரசை உருவாக்கின.

❖ பொதுநலவாய ஆஸ்திரேலியா நடுவண் ஆட்சியைக் கொண்ட நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பாகும்.

❖ ஆஸ்திரேலியாவில் மொத்தம் மூன்று அரசு சட்ட அமைப்புகள் செயற்படுகின்றன:

⇨ சட்டமன்றம்: பொதுநலவாய நாடாளுமன்றம். இதில் அரசி, செனட் அவை, மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். அரசியின் சார்பில் பொது ஆளுநர் பங்கு பற்றுகிறார்.

⇨ நிறைவேற்று அவை: நடுவண் நிறைவேற்றுப் பேரவை. இதில் பிரதமர், மற்றும் அமைச்சரவை அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

⇨ சட்டம்: ஆஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றம் மற்றும் நடுவண் நீதிமன்றங்கள்.

❖ நடுவண் ஆட்சியில் ஒரு பொது ஆளுநரையும். அந்தந்த மாநிலங்களுக்குத் தனித்தனியே ஆளுநர்களையும் அரசி தனது சார்பில் நியமிப்பார்.

❖ அரசியலமைப்பின் படி பொது ஆளுநர் பல நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந் தாலும், அவர் பொதுவாக ஆஸ்திரேலிய பிரதமரின் ஆலோசனைக்கேற்பவே தனது அதிகாரங்களை நிறைவேற்றுகிறார்.

❖ ஒவ்வொரு மாநிலங்களும் மண்டலங்களும் தமக்கென தனியான சட்டசபைகளை (நாடாளுமன்றங்களை) கொண்டுள்ளன.

❖ இவற்றில் வட மண்டலம், அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேசம், குயின்ஸ்லாந்து என்பன ஒரு சட்டசபையையும், ஏனைய மாநிலங்கள் கீழவை, மேலவை என இரு சபைகளையும் கொண்டுள்ளன.

❖ மாநிலங்களின் அரசுத் தலைவர் முதல்வர் (Premier) எனவும், மண்டலங்களின் தலைவர் முதலமைச்சர் (Chief Minister) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

❖ அவுஸ்திரேலியாவில் 6 வயதில் இருந்து 17 வயது வரை பள்ளிப் படிப்பு கட்டாயம் ஆகும். இங்கு மொத்தம் 38 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன.

❖ 1956, 2000 ஆம் ஆண்டுகளில் சர்தேச ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலியாவில் இடம் பெற்றன. 2000 ஆம் ஆண்டிலிருந்து பதக்கங்களை வென்ற நாடுகளின் பட்டியலில் முதல் ஆறு நாடுகளுக்குள் ஆஸ்திரேலியாவும் இடம் பெறுகின்றது.

❖ 1987, 1999, 2003, 2007, 2015 ஆகிய ஆண்டுகளில் இடம் பெற்ற உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

❖ டென்னிஸ் போட்டிகளிலும் ஆஸ்திரேலியா சிறந்து விளங்குகின்றது.

❖ 2006 ஆம் ஆண்டுத் தரவுகளின் படி, ஆஸ்திரேலியர்களின் சராசரி வாழ்வுக் காலம் ஆண்களுக்கு 78.7 ஆண்டுகளாகவும், பெண்களுக்கு 83.5 ஆண்டுகளாகவும் உள்ளன.





வெள்ளி மலர் 25 வது சிறப்பிதழ்

வலுவின் 25 ஆவது இதழ் வெள்ளிமலராக வெளிவர இருக்கின்றது. அதிக பக்கங்களுடன், பல சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவர இருக்கின்ற மலருக்கு, வழமைபோல் தங்களின் நல்லாதரவைத் தந்துதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வலு குழுமம்

# எழுதுங்கள் வெல்லுங்கள்

## போட்டி இல. 24 வினாக்கள்

1. இலங்கையின் தேசிய மரம் எது?
2. மடக்கஸ்கார் நாட்டின் தலை நகரம் எது?
3. மார்சுபியல் வகையைச் சேர்ந்த விலங்குகளில் மிகப் பெரிய விலங்கு எது?
4. சுவாமி விபுலானந்தர் எப்போது பிறந்தார்?
5. 2019ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் 17 சிக்ஸர்களை அடித்து உலக சாதனை படைத்த வீரர் யார்?
6. மாற்றுத்திறனாளிகளின் புகைப்படங்களையும் அவர்களின் சாதனைத் தகவல்களையும் ஆண்டு தோறும் கலண்டர்கள் ஊடாக மக்களை சென்றடைய வைக்கும் இந்திய மாற்றுத்திறனாளி பெண் யார்?
7. சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எப்போது அனுஸ்டிக்கப்படுகிறது?
8. இயலாமையுடன் கூடிய ஆட்களின் நிறுவனத்தின் சுருக்கக் குறியீடுகள்?
9. கைதடி நவீல்ட் பாடசாலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
10. விழிப்புலன் அற்ற மாணவர்களை சாதாரண பாடசாலையில் இணைத்துக் கற்பிக்கலாம் என இலங்கையில் எத்தனையாம் ஆண்டு எந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது?

**இவ்வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி எதிர்வரும் 15.3.2020இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு எமக்கு அனுப்பி வையுங்கள். இவ்வினாக்களுக்குரிய விடைகளை மின்னஞ்சல் மூலம் அனுப்புவதாயின்** Karuvivalu@gmail.com **என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.**

# எழுதுங்கள் வெல்லுங்கள்

### போட்டி இல. 24 விடைகள்

| | |
|---|---|
| 01. ........................ | 06. ........................ |
| 02. ........................ | 07. ........................ |
| 03. ........................ | 08. ........................ |
| 04. ........................ | 09. ........................ |
| 05. ........................ | 10. ........................ |

## போட்டி இல:23 விடைகள்

1. காட்டுக்கோழி
2. சுவிஸ் பிராங்க் (ஊர்கு)
3. ஃப்கூஷிருஜ்பெர்டா (frugiperda)
4. 1878ஆம் ஆண்டு மேமாதம் 25ம் திகதி
5. இங்கிலாந்து
6. மர்லா ருன்யான்
7. மார்ச் -21
8. CRPD
9. செல்வி மேரி சாப்மன்
10. 1943 இல் கன்னங்கரா அறிக்கையில்

1. முழுப் பெயர் : ........................................

2. தபால் முகவரி : ........................................

........................................

3. தொலைபேசி இல : ........................................

4. பிறந்த ஆண்டு மாதம் திகதி : ........................................

**அனுப்ப வேண்டிய முகவரி :** எழுதுங்கள் வெல்லுங்கள்

கருவி, மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

இல : 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

# முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

## இரத்தினம் கந்தராசா

எமது வலு சஞ்சிகையின் 24 வது இதழின் முற்றத்து மல்லிகைப் பகுதியை அலங்கரிப்பவர் கண்ணன் எனச் செல்லமாக அழைக்கப்படும் இரத்தினம் கந்தராசா. மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுவனாக இருந்தபோது இவர் மிகவும் துடிப்புள்ளவராகக் காணப்பட்டார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கற்கத் தொடங்கினார். பாடசாலைக் கல்வியில் மிகவும் தீரராகக் காணப்பட்ட இவருக்கு 14 வயதாக இருந்த போது பீடித்த இனந்தெரியாத நோயினால் பார்வையை இழந்தார். அதுவரை ஒன்பதாம் வகுப்பு வரை பயின்றிருந்தார். பார்வை இழப்பு இவரின் தலைவிதியை மாற்றியது. ஆனால் இவர் மனம் சோராது தனது வாழ்க்கையை திட்டமிட்டு வெற்றிகொண்டமையால் இன்று இவரால் பலர் நன்மைபெறக் கூடியவகையில் வாழ்வா தாரத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார். சில காலங்கள் வீட்டினிலேயே தங்கியிருந்த இவர் 1983ம் ஆண்டு நவீல்ட் பாடசாலையில் இணைந்து பார்வையற்றோர்க்கான கல்வியைத் தொடர்ந்தார். பிறைல் முறையில் கல்வியைத் தொடர்ந்த இவர் பின்னர் விழிப்புலனற்றோருக்கான அமைப்பான விழிப்புலனற்றோர் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து கொண்டார். அதனூடாக விழிப்புலனற்றோருக்கு சேவை செய்வதைத் தனது பணியாகக் கொண்டு இயங்கினார்.

இவர் மதிவதனி என்பவரை திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுடன் தற்போது மீசாலையில் வசித்து வருகின்றார். இவரது மனைவியார் முன்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.



இயல்பிலேயே சுயதொழில் வல்லமையும், வியாபாரத் திறமையும் கொண்ட இவர் தனது வாழ்வாதாரத்துக்காக இடையிடையே பல பொருட்களை வாங்கி விற்பதில் கவனம் செலுத்தினார். அப்போது தனக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தை நினைகூர்ந்தார். இலங்கையில் இனப்பிரச்சினைகள் தொடங்கிய காலகட்டத்தில் இவர் வெற்றிலை வாங்கி விற்றுத் தனது வாழ்வாதாரத்தைப் பேணிவந்தபோது, ஒரு நாள் இவரை ஒரு சாதாரண மனிதர் பின் தொடர்ந்து இவர் வியாபார நடவடிக்கைகளை வேவு பார்த்துவிட்டு இவர் வெற்றிலையைக் கொள்ளவனவு செய்த இடத்தில் அவரும்

கொள்வனவு செய்து இவர் கொண்டு சென்று விற்கும் வியாபார ஸ்தலங்களுக்குக் இவருக்கு முன்பதாகக் கொண்டு சென்று கொடுத்திருக்கிறார். பின்னர் இவர் பொருட்களைக் கொண்டு செல்லும்போது அவர்கள் இவரிடம் வெற்றிலையை வாங்குவதை நிறுத்திவிட்டனராம். காரணம் இவரைவிட அந்த நபர் இவருக்குப் போட்டியாக வெற்றிலையை விலை குறைத்துக் கொடுத்திருக்கிறார். அதனால் இவர் அந்த வியாபாரத்தை நிறுத்தி விட்டாராம்.

விழிப்புலனற்றோருக்காக வழங்கப்படும் பல பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டவர் தும்புத்தடி,பிரஸ்,மெழுகுதிரி போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதில் வல்லவர். அது மாத்திரமல்ல கதிரை பின்னுவதிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். தான் அப் பயிற்சிகளைப் பெற்றதோடு நின்றுவிடாது விழிப்புலனற்றோர் பலருக்கு அப் பயிற்சிகளை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்துக்கும் உதவி வருகிறார்.

2013 ஆம் ஆண்டு 'கருவி' நிறுவனத்தை நிறுவியபோது இவரின் பங்களிப்பும் இருந்திருக்கிறது. அத்துடன் 'கருவி' நிறுவன ஸ்தாபகர்களுள் ஒருவராகவும் நிருவாக சபை உறுப்பினராகவும் இருந்து சமூகப்பணியைத் தொடர்கிறார். கருவியின் மூலம் வழங்கப்படும் சேவைக்காக அதற்குரியவர்களை மதிப்பீடு செய்வதில் சில காலம் பணியாற்றிய பின் தற்பொழுது கருவி உற்பத்தி சந்தைப் படுத்தல் அலகில் முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார். அந்த அலகினால் முன்னெடுக்கப்படும் கருவி சைன் திரவ சலவை சவர்க்கார உற்பத்தியிலும் அதனைச் சந்தைப் படுத்துவதிலும் இவர் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். தற்பொழுது திரவ சலவை சவர்க்காரத்துடன், கருவி கை கழுவி என்னும் இரண்டாவது உற்பத்தியையும் இவர் தொடங்கியிருப்பது இவரது முயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அந்த அலகை இவர் பொறுப்பேற்ற பின்னர் இவரது முயற்சியால் கருவித் தயாரிப்புகளின் விற்பனைப் பிரதேசங்கள் அகலிக்கப்பட்டதோடு விற்பனையும் அதிகரித்திருக்கிறது. இவர் மேலும் அந்த அலகினூடாக இன்னும் பல பொருட்களைத் தயாரிக்க வேண்டிய முயற்சியையும் எடுத்துவருகிறார். தான் ஒரு முயற்சியாளராக மட்டும் இருக்காமல் பல மாற்றுத்திறனாளிகளை இம்முயற்சியில் இணைத்து அவர்களையும் தன் நம்பிக்கையுடையோராக்குவதோடு அவர்கள் வாழ்வாதாரம் மேம்படவும் பாடுபட்டுக்கொண்டு வருகிறார். இவர் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்று சொல்வதில் வலு பெருமைகொள்கிறது.

## வலுவிடம் கேளுங்கள்


**கருவியின் அடுத்த முயற்சியாக "சூழல் நேயராவோம்"என்ற திட்டம் ஆரம்பித்ததற்கான காரணம் என்ன?**

**ம. திருச்செல்வம், காரைநகர்.**

*சூழல் மாசடைவது, புவி வெப்பமாதல் போன்றவற்றால் மனிதகுலம் ஒரு அவலத்தை எதிர் நோக்கி இருக்கிறது. அப்படியானவற்றில் இருந்து பூமியை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு மனிதர்களாகிய எல்லோருக்கும் உண்டு. கருவியும் ஒரு சமூகப்பொறுப்புள்ள நிறுவனம் என்ற வகையில் உலகத்தின்மீது கவனம் கொள்ள வேண்டியதும் எமது தலையாய கடமைகளில் ஒன்று என நாம் கருதுகிறோம். இராமர் அணை கட்டுகின்றபோது அணில் ஒன்று அவருக்கு உதவியதுபோல, நாமும் பூமியைப் பாதுகாக்கின்ற பணியில் பங்குதாரர்களாகின்றோம். உலகத்தோடு கைகோர்க்கும் முயற்சி இது.*

சிறுகதை

# திறமையே! இயலாமையை ஒழித்திடு



காரின் கதவு மேலே தென்னைமர உயரத்திற்கு சென்று வந்து விழுந்தது. ஒரு சிறிது நேரத்தில் ஈக்களை விட அதிகமாகவே சனங்கள் மொய்த்துக் கொண்டனர். உடனடியாக அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றிச்சென்றும் பிரயோசனமற்று இருவரும் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். திருமணத்தில் ஒன்றாக இணைந்த கை இறப்பிலும் கைகோர்த்தே சென்றனர். "ஆ..அம்மா....ஆ" என்ற ஒரு முனகல் சத்தம். அங்கே ஒரு பதினைந்து வயது மிக்க ஒருவனுடைய உடல் நசிந்த நிலையில் காணப்பட்டது.மெதுவாக தனது கண்களைத் திறந்தான். முதலில் அவன் கண்ணில் வெண்மையான சுவர்களே தென்பட்டது. அந்த வெண்மையில் இருந்த வெறுமை அவன் வாழ்விலும் தெரிந்தது. பெற்றோரின் இழப்பு, தனிமை என எல்லாவற்றாலும் அவனுக்கு இதயம் வலித்தது. கண் ஓரத்தில் ஈரம் கசிந்தது. கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டு கண்களை துடைத்தான். அங்கே வருகை தந்த வைத்தியர் பார்க்கும் போது மகாத்மா போல் இருந்தார். ஆனால் அவர் கூறிய வார்த்தைகள் கூரிய வாளினால் அரிந்தது போல் இருந்தது. "உங்களுக்கு இதுபற்றி நிச்சயமாக விளங்கப்படுத்த வேண்டும். உங்களின் முள்ளந்தண்டில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக உங்களால் நடக்க இயலாமல் போய்விட்டது. இனிமேல் நீங்கள் சக்கர நாற்காலியில்" என்று கூறிமுடிக்கும் முன்னரே வாழ்க்கையில் இனி எனக்கு என்ன இருக்கிறது என்பது போல அவனுக்கு இருந்தது. அவனுக்கு உயிரான கால்பந்தாட்டமும் காணாமல் போய்விட்டது.

ஐந்து மாதம் வெறுமை, விரக்தி, வெறுப்பு எல்லாம் கூடிக் கொண்டது. திடீரென்று ஒருநாள், அவனுடைய அப்பாவின் தங்கை வந்திருந்தார். அவரை பார்க்கும் போது தான் அவனுக்கு புதிதாக ஒரு உற்சாகம் கிடைத்தது. அவர் அவனை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அதுவும் ஏனைய உறவினர்கள் கூறியதால்தான் என அங்கு சென்ற பின்பு தான் விளங்கியது. அவர் எப்போதும் அவனை ஒரு சுமையாகவே கருதினார். வீட்டிற்கு வருபவர்களிடம் அவனைப்பற்றி தவறாக கூறிக் கொண்டிருப்பார். அந்த வீட்டில் உள்ள ஏனையவர்கள் அவனை ஏளனமாக பார்ப்பார்கள். அவனுடன் எவரும் பேசுவது கூட இல்லை. அவனுக்கு ஏதோ ஒரு காட்டில் தனிமையில் இருப்பது போல இருந்தது. பலநாள் தனிமையில் அழுதிருக்கிறான். அவனிடம் அன்பாக பேச ஒருவர் கூட இல்லை.

இந்நிலையில் தான் அந்த வீட்டிற்கு இனிமேலும் சுமையாக இருக்கக் கூடாது என அங்கிருந்து தனது சக்கர நாற்காலியில் புறப்பட்டான். எங்கே போவது? என்ன செய்வது? என்று ஒன்றும் புரியவில்லை. ஏதோ திசையில் தனது வண்டியை செலுத்தினான். நீண்ட

நேரத்தின் பின்பு அவன் கண்ணில் பட்டது ஒரு புகையிரத நிலையம். அங்கு சென்ற வன் தான் இனிமேலும் ஒருவருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்று மன விரக்தியில் வர இருக்கும் புகையிரதத்தில் பாய தயாராக இருந்தான்.

"ஐயா இன்னும் ஒரு மாதம் தாருங்கள் நான் எப்படியும் திருப்பி உங்கள் கடனை கொடுத்து விடுவேன்" என்று அழுதார் ஒரு தாத்தா. புகையிர தத்தில் பாய தயாராகியவன் இந்த சத்தத்தில் சற்று தடுமாறினான். அதற்குள் புகையிரதம் கடந்து போய்விட்டது. அவ னுக்கு அது ஏமாற்றமாகவே தெரிந்தாலும் "என்ன அங்கே நிகழ்கின்றது?" என பார்க்கும் ஆர்வம் மேலோங்கியது. அவ ருக்கு அருகே சக்கர நாற்காலியை செலுத்தி அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவரிடம் "என்ன நடந்தது?" என்று கேட்டான். அந்த பெரியவர் ஒருவரிடம் கடன் வாங்கி இந்த புகையிரத நிலையத்தில் கடை வைத்திருக்கிறார். அவர் வயது போன படியால் இந்த புத்தகக் கடையை நடாத்தி செல்லமுடியவில்லை. அவருக்கு பெரிதாக வியாபாரமும் நடப்ப தில்லை என்று தெரிய வந்தது. அவனுக்கு அதை கேட்டவுடன் எங்கிருந்து தைரியம் வந்ததோ தெரியவில்லை. கடன் கொடுத்த வரிடம் சென்று "ஐயா இன்னும் ஒரு கிழமை தாருங்கள் நான் உங்களுக்கு அந்த கடனை அடைத்து விடுகின்றேன். என இரந்து கேட்டான். ஆனால் அவரோ ஒரு ஏளனச்சிரிப்புடன், " இந்த வயது போன மனுசனுக்கு இந்த கால் ஏலாத வன் உதவி செய்ய போகின்றானாம்" என்று மனசாட்சி இல்லாமல் கூறினான்.

அவனுக்கோ என்ன செய்வ தென்று தெரியவில்லை. அங்கிருந்த ஒவ் வொருத்தரிடமும் தனக்கு உதவும் படி கேட்டான். இதைப் பார்த்த பொழுது அந்த தாத்தாவிற்கே ஒரே ஆச்சரியம். பிறகு அங்கு புகையிரத நிலைய அலு வலகத்தில் பணிபுரியும் ஒருவர் வந்து கேட்டு கொண்டதன் பேரில் அவர் ஒரு கிழமை அவகாசம் கொடுத்தார். சிறிது நேரத்தின் பின், நிலைகுலைந்து போன தாத்தா அருகே, நீ ஏன் ராசா எனக்காக கஷ்டப்படுகிறாய்? " எனக் கேட்டார். அதன் பிறகு அவன் தன்னைப் பற்றி எல்லாவற்றையும் கூறினான். அந்த தாத்தா தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அவரும் ஒரு தனி மனிதன் தான். சிறிது நேரத்தில், சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தார். அவ னுக்கோ நிறைய நாட்களுக்குப் பின் யாரோ பாசத்தோடு உணவு கொடுத் தது போல் இருந்தது. ஒன்றும் கூறா மல் கடகட என உண்டான். ஏனெனில் அவன் நிறைய நாட்களுக்கு பின் பாசத்தோடு கலந்து உணவு உண்கின்றான்.

அந்த ஐயா கேட்டார், "எப்படி ராசா என்னுடைய கடனை ஒரு கிழ மையில் அடைப்பது?" என்றார். அதற்கு அவன் "தாத்தா நீங்கள் அதைப் பற்றி யோசிக்க வேண்டாம். நீங்கள் போய் உறங்குங்கள்" என் றான். என்றாலும், அவனுக்கு ஒரு யோசனையும் தென்பட வில்லை. மனக்கலக்கத்துடன் சக்கர நாற் காலியை சுழற்றிக் கொண்டு அந்த வீடு முழுவதும் சுற்றி வந்தான். அங்கே ஒரு அறையில் சில புத்தகங்கள் காணப்பட்டன. அதில் ஒன்றை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். வாசித்து முடிக்கும் பொழுது அவனுக்குள் ஒரு தெளிவு, புத்துணர்ச்சி தென்பட்டது. ஏனெனில் அந்த புத்தகத்தில், "எல்லாம் இந்த உலகத்தில் ஒரு காரணத்துக் காகத் தான் நடக்கிறது", "நீங்கள் உடல்

ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ உடைந்து போயி ருந்தால் அதை மாற்றி நீங்கள் பெரிய ஒரு மாற்றத்தை கொண்டு வருவதற்கே உங்களுக்கு இந்த வாழ்க்கை வழங் கப்பட்டதே அன்றி அதை நினைத்து வருந்துவதற்காக அல்ல", உங்களை ஊனமாகவோ அல்லது குறையுடனோ கடவுள் படைத்தார் என்றால் உங்களைக் கொண்டு கடவுள் இந்த உலகில் ஏதோ சிறந்த உயர்ந்த செயலை படைப்ப தற்காகவே அன்றி உங்களை முடங்கி இருப்பதற்காக அல்ல." "வாழ்க்கை என்பது நிறைய பிரச்சனைகளை வைத்து ஆக்கப்பட்டது. நாம் வாழ வேண்டும் என்றால் அவற்றையும் சந்திக்கத் தான் வேண்டும்." "ஊனம் என்று ஒருநாளும் முடங்கி இருக்காதே, உன்னால் ஒரு செயலை செய்யமுடியவில்லை என்றால் உன்னால் செய்யப்பட வேண்டிய வேறு ஏதோ ஒரு பெரிய செயல் உள்ளது. அது உன் திறமையைக் கொண்டு நீ வெளிக் கொணர வேண்டும்." " ஊனமுற்றோர். என்ற வார்த்தை கேட்கும் போது மனதில் தோன்றுவது நடக்கவோ பேசவோ இல்லாவிடில் ஏதோ ஒரு செயலை செய்ய முடியாதவர் என்று, ஆனால் உண்மை யான இயலாமை என்றால் என்ன தெரி யுமா தன்னிடம் இருப்பதைக் கொண்டு வாழத் தெரியாமல் வாழ்க்கையை சந்தோசமாக வாழாமல் வாழ்வதே உண்மையான ஊனம்." எனவே நீ உன்னிடம் இருப்பதை வைத்து சந்தோச மாக வாழப்போகிறாயா? இல்லை சாதார ணமான மனிதனைப் போல் சந்தோ சத்தை தொலைத்து வாழப் போகிறாயா"?, என்று மனதை ஒரு அலசல் போடும் அளவிற்கு அந்தப் புத்தகத்தில் நிறைய விடயங்கள் இருந்தது. அவன் வாழ்வில் அது பெரிய மாற்றத்தையே ஏற்படுத்தியது. அடுத்த நாள் காலை, அதிகாலையிலே எழுந்து தயாராகி அந்த தாத்தாவிடம் சாவியை பெற்றுக் கொண்டு கடைக்குச் சென்றான். அங்குள்ள சில புத்தகங்களை எடுத்து வாசித்தான்.

அவனுக்குள் மேலும் மேலும் தெளிவு ஏற்பட்டது. பின்பு அவற்றை எடுத்து ஒரு பையில் போட்டு அதை எடுத்துக் கொண்டு சக்கரநாற்காலியில் அங்குள்ள பயணிகளிடம் அந்தந்த புத்தகங்களில் உள்ள விடயங்களை அழகாக எடுத்துக் கூறி அந்தப் புத்த கங்களை வாங்குமாறு இரந்து கேட் டான். சிலர் அவனின் பேச்சாற்றலில் மயங்கி புத்தகங்களை வாங்கினார்கள். இன்னும் சிலர் அவன் புத்த கத்தில் உள்ள நல்ல விடயங்களை கூற அதன் மூலம் அந்த புத்தகத்தை வாங்கிப் படிக்க வேண்டும் என ஆர்வத்தில் வாங்கினார்கள், மேலும் சிலர் அவர்களின் மனதில் உள்ள கலக்கத்தை தெளிய வைத்தமைக்காக புத்தகங்களை வாங்கினார்கள. ஆனால் எவருமே அவனுடைய இயலாமையைப் பார்த்து வாங்க வில்லை. ஏனெனில் அவனின் திறமை அவனை ஊனமுற்றவனாக பார்க்க முடியவில்லை. மாறாக, உயர்ந்த மனிதனாகவே பார்க்கச் செய்தது. இருப்பினும், ஒருசிலர் அவனைப் பரிகாச சிரிப்புடன் ஏளன மாப் பார்த்தனர். ஆதற்கு அவனின் ஒரே பதில் ஒரு புன்சிரிப்பு மட்டுமே ஆகும். அவனின் அந்த செயல் அவனுடைய தன்னம்பிக்கையை விளக்கியது. இவ்வாறு புத்தகங்களை விற்றது மட்டுமல்லாமல் மேலும் புத்தகங்களை வாங்கினான். அத்துடன் மூன்று நாட்களிலேயே கடனையும் செலுத்தி விட்டான். அதைப்பார்க்கும் போது அந்த தாத்தா விற்கு மிகவும் பெருமையா கவே இருந்தது.

இவ்வாறு ஒரு நாள் புத்த கங்களை விற்று வரும் போது அங்கே ஒரு பெரியவர் இருப்பதைக் கண்டு ஒரு புத்தகத்தை எடுத்து அதைப்பற்றி கூறினான். அதில் சில ஊக்கமூட்டும் வார்த்தைகளையும் சேர்த்து அவரை வாங்குவதற்கு ஆர்வத்தை ஏற்படுத் தினான். அதற்கு மாறாக அவர், "தம்பி நீ யாரப்பா? நீ கூறியவற்றை கேட்டவுடன் எனக்கு இருந்த பிரச்சனை அனைத்தும் காணாமல் போனது. நீ இப்போது என்னுடன் ஒரு இடத்திற்கு வரவேண்டும்." என்றார். அவன் "ஏன்" என்று கேட்ட பொழுதும் கூட ஒன்றும் கூறவில்லை. அவனும் அந்த தாத்தாவிடம் கூறிவிட்டு அவருடன் சென்றான். அது ஒரு கூட்டம் நடைபெறவிருந்த இடம். இந்த பெரியவர்தான் அங்கு பிரதமவிருந்தினர். அவரை பிரமத விருந்தினர் உரை ஆற்ற அழைத்த போது அவர் அவனை மேடைக்கு கூட்டிச் சென்று, " எனக்கு பதிலாக இவன் இந்த கூட்டத்தில் பேசுவான்" என்றார். அவனுக்கு ஒரே ஆச்சரியம். இருந்தாலும் அவர் தந்த வாய்ப்பை இழக்க விரும்பவில்லை. "என்னுடைய பெயர் அகிலன்" என்று ஆரம்பித்து தனது வாழ்வில் தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் தான் அதை வெற்றி கொண்ட விதம் தான் புத்த கங்களில் வாசித்த விடயங்கள் என தனது உரையை ஆற்றினான். பலத்த கர கோசங்கள். அப்போதுதான் புரிந் தது என்ன காரணத்திற்காக இறை வன் தன்னுடைய வாழ்வை இப்படி மாற்றினார் என்று மேடையி லேயே வைத்து கண்கலங்க வைத்தது.

பின்னர் இவனின் பேச்சுத் திறமையை கேள்வியுற்ற அனை வரும் மேடைப் பேச்சுக்களுக்கு இவ னையே அழைத்தனர். பின்னாளில், சிறந்த மேடைப் பேச்சாளன் ஆகிய அகிலன் இந்த அகிலத்தையே அதிர வைத்தான். பின்னர் சொந்த செலவில் நல் வாழ்வு மையம் அமைத்து மக்களுக்கு உதவி புரிந்தான். அவன் தனக்கு வாழ்வு தந்த அந்த தாத்தாவை யும் கைவிடாமல் இறுதி வரை அவரு டன் இருந்து சேவை செய்தான் திறமையாளன் அகிலன்.

"அவனுடைய திறமை கொண்டு அவனின் இயலாமையை மறைத்துவிட்டான்."

**புவித்திரா தேவராசா**
வைரவ புளியங்குளம்.
வவுனியா.




# கருவி சைன்

**கருவியின் தயாரிப்பான கருவி சைன் திரவ சலவை சவர்க்காரத்துக்கு நீங்கள் தரும் ஆதரவினால் எமது முயற்சி மென்மேலும் விரிவாக்கம் பெறுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**



இன்பத்தேன்
மென்பான நிலையம்
FRESH JUICE
இயற்கைப் பழச்சாறு
சிவலிங்கப் புளியடி, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
விசேட வைபவங்களுக்கு
077 433 1874
இன்பத்தேன்
மென்பான நிலையம்

# ANNA INDUSTRIES




அண்ணா தொழிலகம் இணுவில் தெற்கு, இணுவில்.


எவகிறீன் அச்சகம். இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893